# அரசு ஊழியர்

செப்டம்பர் 2021

மலர் : 42 இதழ் : 9

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*



## சூடா ஒரு கோப்பை சூப்

### கூற்றம்!

*தொல்கடலின் வேங்கைச்சுறா*
*ஆழம் அறியும் வேழம் அறியும்!*
*கானில் பூத்த புளிய மரம்*
*கொடுங்காற்றின் குலப்பாடல்*
*கூளம் அறியும்!*

*வல்லரவின் உட்செவிகள்*
*மேளம் அறியும் கோளும் அறியும்!*
*கொல் கூற்றின் கொக்கரிப்பு*
*நீயறிய மாட்டாயோ?,*
*உடன்பிறப்பே! ரத்தத்தின் ரத்தமே!*
*தோழனே! தொண்டனே!*
*தலைவன் யார்?*
*கயவன் யாரென்று?*

- **நாஞ்சில் நாடன்**



தலைவர் மடல்

## எங்கள் நம்பிக்கை கோட்டை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைவிடப் பெரியது!

*அன்பிற்கினிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு.*

*இன்னமும் தங்கள் மீது பத்து லட்சம் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நம்பிக்கையிழக்காமல் இருக்கிறோம். நீங்கள் சொன்னதைச் செய்யும் முதல்வராகவே இருக்கிறீர்கள். அப்படியே இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். உங்கள் மீது நாங்கள் கட்டி வைத்திருக்கும் நம்பிக்கை கோட்டை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையை விடப் பெரியது. ஆனால் அதன்மீது உங்கள் தளபதிகளே கல்லெறிவது என்பது உங்கள் தூய வெள்ளைச் சட்டையின் மீது சேற்றை வீசுவது போல் உள்ளது.*

*எதிர்க்கட்சித் தலைவராய் இருந்தபோது நாங்கள் கேட்குமுன்னே எங்களுக்காக நீங்கள் எத்தனை முறை குரல் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் சொல்லத் தேவையில்லை நாடே அறியும். ஆனால் இன்றோ முதல்வராய் வீற்றிருக்கும் தாங்கள் நாவை சுருட்டிக்கொண்டு மௌனம் பேசுவது ஆச்சர்யமாக உள்ளது. சென்ற ஆண்டு கொரோனா தொற்று உச்சத்தில் இருந்தபோது எடப்பாடி அரசு அகவிலைப் படியை 18 மாதங்களுக்கு நிறுத்தி வைப்பதாக மத்திய அரசின் சொல்கேட்டு நடந்தபோது தாங்கள் விடுத்த அறிக்கையும், கொடுத்த பேட்டியும் இன்றும் ஒவ்வொரு அரசு ஊழியர், ஆசிரியரின் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. அகவிலைப்படி என்பது வாழ்வூதியம் என்பதை தாங்கள் அறியாதவர் அல்ல. அது எதற்காக வழங்கப்படுகிறது என்பதையும் நாங்கள் தங்களுக்கு விளக்க வேண்டியதுமில்லை. ஏதோ எடப்பாடி பழனிச்சாமி அவர்களைப்போல் நீங்கள் ஒரு அரசியல் விபத்தில் முதல்வர் பதவிக்கு வந்தவரல்ல, அரசியலில் படிப்படியாக பாடம் படித்து முறைப்படியாக முதல்வரானவர். உங்களுக்கு அகவிலைப்படியின் சித்தாந்தம் புரியவில்லை என்று நாங்கள் நம்புவதற்கு எந்த ஒரு காரணமும் இல்லை. ‘அகவிலைப்படி என்பது*

அரசு ஊழியர்களின் வாழ்வாதாரம், அதில் கைவைப்பது அவர்களுடைய வாழ்க்கையை பாதிக்கும். எக்காரணம் கொண்டும் அகவிலைப்படியை மத்திய அரசோ, மாநில அரசோ நிறுத்தக்கூடாது' என்று போனவருடம் மோடி அரசுக்கும், எடப்பாடி அரசுக்கும் அறிவுரை சொன்ன நீங்களா இன்று அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் 11 சதவீத அகவிலைப்படியை ஏப்ரல் 2022வரை நிறுத்தச் சொல்லியிருக்கிறீர்கள்? ஒருபுறம் அதிர்ச்சியாக இருந்தாலும் மறுபுறம் சந்தேகமாகவும் உள்ளது. 11 சதவீத அகவிலைப்படியை நிறுத்தச் சொன்னது நீங்கள்தானா என்று.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அரசமைக்கவும் அதன் தலைவரான தாங்கள் முதலமைச்சராக மகுடம் சூட்டவும் தூய நெஞ்சுடன் ஒத்துழைப்பு நல்கியவர்கள் அரசு ஊழியர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்த அளவுக்கு உங்களுடைய அமைச்சர் பெருமக்களில் சில பேருக்கு தெரிந்திருக்கவில்லை என்பது அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பற்றி தெரிவிக்கும் கருத்துக்களில் இருந்து தெரிகிறது. இன்று தங்களது அமைச்சரவைகளில் உள்ளவர்களில் சிலரும், எம்.எல்.ஏ.க்களில் சிலரும் அரசு ஊழியர்களின் தபால் ஓட்டுக்கள் மூலம் வென்று சட்டமன்றத்திற்குள் நுழைந்துள்ளதை அரசு ஊழியர்களை அலட்சியப்படுத்திப் பேசும் தங்களின் தலைமையின் கீழுள்ள சிலபேர் அறிவார்களா என்று தெரியாது. அரசுக்கு நிதி நெருக்கடி உள்ளது என்பது நீங்கள் எதிர்கட்சித் தலைவராக இருக்கும்போதே உங்களுக்குத் தெரியாததல்ல. அதைத் தெரியாமல் நீங்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உரிமைகள் திமுக ஆட்சியில் பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழி கொடுத்திருக்க முடியாது. தேர்தல் நேரங்களில் அரசியல்கட்சிகள் வாக்குறுதிகளை வாரி வழங்குவதும் ஆட்சிக்கு வந்தபின் அதை செயல்படுத்த முடியாமல் அவற்றை கண்டு கொள்ளாமல் இருந்துவிடுவதும் வழக்கமான ஒன்றுதான் என்பதை அரசு ஊழியர்கள் அறியாதவர்கள் அல்ல. ஆனால் திராவிட முன்னேற்றக கழகத் தலைவரை ஏனோதானோ வென்று வாக்குறுதிகளை அள்ளிவீசும் அரசியல்வாதியாக நாங்கள் பார்க்கவில்லை. நீங்கள், உங்களால் முடியும் என்று நம்புவதைத் தான் சொல்வீர்கள், சொன்னதைத் தவறாமல் செய்வீர்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை தமிழக அரசுத்துறைகளில் பணிபுரியும் ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் உண்டு. அதனால்தான் உங்கள் வாயிலிருந்து வந்த வாக்குறுதிகளை அரசாணைகளாக எண்ணி அதை நீங்கள் சொன்னபடி நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் அரசு ஊழியர்களும், ஆசிரியர் களும் பொறுமையுடன் காத்திருக்கிறோம். அதனால்தான் சொன்னது நீங்கள்தானா என்று நம்ப முடியாமல் திகைத்து நிற்கிறோம்.

நீங்கள் அமர்த்தி இருக்கும் பொருளாதார நிபுணர்களுக்கும், நிதியமைச்சருக்கும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வாக்குச் சீட்டாகவோ அல்லது வேலையாட்களாகவோ தெரிகிறார்கள் போலும். அதனால்தான், அவர்கள் அரசின் வருவாயில் 60 சதவீதம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கே சென்று விடுகிறது என்கிற பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள். இந்த 60 சதவீதத்தில் உண்மையில் எத்தனை சதவீதம் அரசு ஊழியர்களுக்கு செல்கிறது என்பதை மனசாட்சியுடன் தெரிவிக்க வேண்டும் அவர்கள். இந்த 60 சதவீதத்தில் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களின் ஊதியமும் அவர்கள் செய்யும் செலவினங்களும் காருக்கு போடும் பெட்ரோல் டீசல்வரை அடங்கும் என்பதையும் அவர்கள் தெரிவித்தால் அவர்களை உண்மையில் நியாயமானவர்களாக நாங்கள் கருதுவோம். இந்த 60 சதவீதத்தில் 29 சதவீதம் மட்டுமே அரசு ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்கு செலவிடப்படுகிறது என்பதும் மீதமுள்ள 31 சதவீதம் எம்.எல்.ஏக்கள், அமைச்சர்கள் சம்பளம், படிகள், கார் செலவினங்கள், போன்ற இத்யாதிகளுக்கு செலவிடப்படுபவை என்பது அரசு ஆவணமாகவே உள்ளதை யாரும் மறுத்துக் கூறிவிட முடியாது. உண்மையில் அரசுக்கு நிதி நெருக்கடி இருக்குமானால் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய இடம் முதல்வரும் அமைச்சர்களும் செய்யும் ஆடம்பர செலவுகளில் இருந்துதான்.

எதற்கு ஒரு அமைச்சருக்கு பத்துக்கும் மேற்பட்ட கார்கள் அணிவகுத்துச் செல்ல வேண்டும்? எதற்கு ஆடம்பர விழாக்கள் செய்ய வேண்டும். எதற்கு எம்.எல்.ஏ.க்களும் அமைச்சர்களும் சம்பளம் பெற வேண்டும் என்ற அடுக்கடுக்கான கேள்விகள் கேட்க

வேண்டியிருக்கிறது. இந்த கேள்விகளுக்கும் ஏழைகளின் வறுமைக்கும், நிதிச்சுமைக்கும், வரிச்சுமைக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிட முடியுமா உங்கள் நிதியமைச்சரால்? அதிகாரிகள் அமைச்சர்கள் செய்யும் ஆடம்பர செலவுகள் இத்தனை சதவீதம் என்று எப்போதாவது யாராவது அரசுத்தரப்பில் புள்ளிவிபரம் சொன்னதுண்டா?

அரசாங்கம் என்பது ஒரு கட்டமைப்பு. அதில் அடிப்படையான சில விஷயங்கள் தவிர்க்க இயலாதவை. அமைச்சர்கள் வாடகைக்காரில் போய் மக்கள் சேவை செய்வார்களா? அவர்களுக்கு அரசுச் செலவில் அலுவலகம் எதற்கு என்று அவரவர் வீட்டிலிருந்தே மக்கள் சேவை செய்யுங்கள் என்று முதல்வர் சொல்லிவிட முடியுமா? அப்படிச் செய்தால் மட்டும் அரசின் செலவினம் குறைந்துவிடுமா என்ன? அமைச்சர் என்றால் அவருக்கு அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டிய மரியாதை என்று உண்டு. அது தேவையில்லாத ஒன்று என்று இதுவரை எந்த அரசாங்கமாவது புறந்தள்ளியிருக்கிறதா? அதைப்போல்தான் அரசு ஊழியர்கள் என்றால் அவர்களுக்குரிய மரியாதையை அரசியலமைப்புச் சட்டம் செய்து கொடுத்திருக்கிறது. அதை அரசாங்கங்கள் மறுதலிக்கக்கூடாது. இன்று உங்கள் நிதியமைச்சர் கைவிரித்திருக்கும் அகவிலைப்படியும், பழைய ஓய்வூதியத் திட்டமும் அரசாங்கம் அரசு ஊழியர்களுக்கு போடுகின்ற பிச்சையல்ல. அது அவர்களுடைய உரிமைகள். காலம்காலமாக போராடிப் பெற்ற உரிமைகள். அதை ஏதோ இலவசமாகக் கொடுப்பது போல் உங்கள் நிதியமைச்சர் பேசியிருப்பது அவரின் அனுபவ முதிர்ச்சி யின்மையையே காட்டுகிறது. நாட்டில் விலைவாசியை கட்டுக்குள் வைத்திருக்க முடியாத அரசாங்கங்கள் அகவிலைப்படியை கொடுத்துத் தீர வேண்டியது கட்டாயம்தானே. பக்கத்து வீட்டில் இருக்கும் மத்திய அரசு ஊழியன் பெறும் அகவிலைப்படியை மாநில அரசு ஊழியர் பெறமுடியாமல் கடனில் வாழ்க்கை வாழ நேரிடுகிறதே அதுதான் சமூக அநீதி. பொருட்களின் விலைவாசி ஏறிவிட்டது ஏழை கஷ்டப்படுகிறான். அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்ற பரப்புரை எவ்வளவு மலினமானது. விலைவாசி ஏறுவதற்கு காரணம் யார்? மக்கள் வரிப்பணத்தை கொள்ளையடித்து வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் டெபாசிட்டுகளாகவும், முதலீடுகளாகவும், நிறுவனங்களாகவும் வைத்திருப்பது சாதாரண ஏழையா? அரசு ஊழியர்களா? அரசியல் வாதிகளா?

சமூக அநீதி என்ற வார்த்தை எவ்வளவு பெரியது. அதை உங்கள் நிதியமைச்சர் அரசு ஊழியர்கள் மீது பயன்படுத்தியிருப்பது தன்னுடைய சம்பளத்தை மட்டுமே கொண்டு வாழ்க்கை நடத்தும் ஒவ்வொரு அரசு ஊழியரையும் மனக் கொந்தளிப்பு அடைய வைத்துள்ளது. ஒரு அரசாங்கம் தனது ஊழியர் களை சுமையென கருதுமானால் அங்கே மக்களின் திட்டங்கள் ஒருபோதும் முழுமையாக நிறைவடையாது. ஒரு அரசாங்கம் அதன் ஊழியர்களை கௌரவாக வைத்திருக்காமல் மக்களை மகிழ்ச்சியாகவும் நாட்டை முன்னேற்றப் பாதையிலும் கொண்டுசெல்ல முடியாது என்பது வரலாறுகள் காலம்காலமாக கூறும் பாடம். நிதியை காரணம் காட்டி நிர்வாகத்தை முடக்கிவிடுவதைத் விட மோசமான ஆபத்து வேறொன்றுமில்லை. அரசு ஊழியர்கள் என்பவர்கள் அரசாங்கத்தின் ஆன்மா. அந்த ஆன்மாவை பொருளாதார வல்லுநர்களும், நிதியமைச்சரும் தேடிக் கண்டுபிடிக்க முடியாது. அதை அரசியல் அனுபவம் வாய்ந்த பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் போன்றவர்களின் அருகாமையில் இருந்து பாடம் பயின்ற உங்களைப் போன்றவர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும். அரசு ஊழியர்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான உரிமைகளைத்தான் கேட்கிறார்கள். அதை மறுப்பதற்கான எந்த நியாயங்களும் ஏற்புடையவை அல்ல. அதைவிட அதை மறுதலிக்கும் முறையில் அரசு ஊழியர்களை கேவலமாக சித்தரிக்கும் போக்கு என்பது ஒரு நெறிசார்ந்த அரசுக்கு அழகு சேர்க்காது.

ஓட்டு போடாதவர்களும் நாம் ஏன் இந்த கட்சிக்கு ஓட்டு போடவில்லை என வருந்தும் அளவிற்கு உங்கள் அரசாங்கம் நடைபெற வேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணமும். ஆனால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற் றாமல் நீங்கள் நீண்ட மௌனம் காப்பதும், உங்களுடைய அமைச்சர் சகாக்கள் அரசு ஊழியர்களை பொதுவெளியில அவமானப் படுத்தும் வகையில் பேசுவதும் உங்களை வாக்குதவறியவராகவும், உங்கள் அமைச்சர்களை அக்மார்க் அரசியல்வாதிகளாக மக்களிடத்தில்

அடையாளம் காட்டிவிடும் என்பதையும் தாங்கள் உணர வேண்டும். காலம் இன்னும் கடந்துவிடவில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளையும், ஜாக்டோ ஜியோ அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களையும் அழைத்துப் பேசுங்கள் அரசாங்கத்திற்கு உதவவும், மக்களுக்கு ஊழியம் செய்யவுமே ஊழியர்களாகிய நாங்கள் இருக்கிறோம். நீங்கள் சொன்ன வாக்குறுதிகள் இன்னும் வாக்குறுதிகளாகவே காற்றில் மிதக்கின்றன. நீங்கள் சொன்னதை நிச்சயம் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. உங்களுக்கு அது எங்களை விட நிறையவே உள்ளது என்பதையும் நாங்களறிவோம். அழைப்பீர்கள், பேசுவீர்கள், சொன்ன சொல்லை நிச்சயம் காப்பாற்றுவீர்கள். நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம்.

தோழமையுடன்
**அரசு ஊழியர்கள்.**

# நாகப்பட்டினம் சிறப்புப் பேரவை



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் மாவட்ட சிறப்புப் பேரவை மற்றும் அசுப் பணியை நிறைவு செய்த மாவட்ட நிர்வாகிகளுக்கான பணி நிறைவு பாராட்டு விழா இன்று ( 08.08.2021 ) நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் மாவட்டத் தலைவர் து.இளவரசன் தலைமையில் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்கக் கொடியை மாவட்டத் தலைவரும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியை மாநிலத் தலைவரும் ஏற்றிவைத்தனர்

நாகை வட்டச் செயலாளர் மு.தமிழ்வாணன் வரவேற்றார். மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் வேலை அறிக்கையையும் மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் நிதிநிலை அறிக்கையையும் சமர்ப்பித்தனர். மாவட்ட நிர்வாகிகள் கே.இராஜு, பா.ராணி, என்.புகழேந்தி, சி.வாசுகி, எம்நடராஜன், ஜ.ஜம்ருத்நிஷா, ஆர்.கலா, வி.எஸ்.இராமமூர்த்தி, எம்.இராமச்சந்திரன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாவட்டச் செயலாளர் மயிலாடுதுறை மாவட்ட மையம் இன்று முதல் து.இளவரசனை அமைப்பாளராகக் கொண்ட குழுவுடன் செயல்படும் எனவும், மாவட்ட மாநாடு வரை பா.ராணி நாகப்பட்டினம் மாவட்டத் தலைவராக பொறுப்பேற்று செயல்படுவார் என்ற மாவட்டச் செயற்குழுவின் முன்மொழிவை சமர்ப்பித்தார். அறிக்கைகள், தீர்மானங்கள் மற்றும் முன்மொழிவுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட துணைத் தலைவர்கள் என்.புகழேந்தி, சி.வாசுகி மற்றும் முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் மு.தமிழ்வாணன் ஆகியோரின் அரசுப் பணி நிறைவு பாராட்டில் நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார், வருவாய்த்துறை அலுவலர் சங்க நிர்வாகி இராஜசேகர், ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலச் செயலாளர் எஸ்.சித்ரா, கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் எம்.சௌந்தர்ராஜன், மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.




நினைவுப் பரிசுகளை வழங்கி மாநிலத் தலைவர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். பணி நிறைவு பெற்றவர்கள் ஏற்புரை வழங்கினர். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் நன்றி கூறினார். ■

# தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை
# அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஏமாற்றம்!

**த**மிழக அரசு ஊழியர்களின் பிரச்சினைகள் ஏராளமாக குவிந்து கிடக்கின்றன. கடந்தகால அதிமுக ஆட்சியில் அமல்படுத்திய ஊதிய மாற்றத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை களைவதற்கோ, புதிய பென்சன் ரத்து செய்திடவோ, காலியிடங்களை நிரப்புவதற்கோ, சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணி புரியக்கூடியவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவதற்கு எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் 10 வருட காலம் உருண்டோடியது. இவைகளை நிறைவேற்ற வலியுறுத்தி நாம் நடத்திய போராட்டங்களின் பின்னணியில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 4 மாதம் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு இடையில் தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டில் ஊழியர்கள் எதிர்பார்த்திருந்த கோரிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதும், அதில் ஒன்றிய அரசால் முடக்கப்பட்ட அகவிலைப்படி 11% அறிவிக்கப்பட்டு பல மாநிலங்களில் தனது ஊழியர்களுக்கு வழங்கப் பட்ட பிறகும் தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் 1.4.2022ல் முதல் அகவிலைப்படி வழங்கப்படும் என்பது மிகுந்த ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### அரசு ஊழியர் நலன் காக்கும் அரசு ஊழியர் சங்கம்


அரசு ஊழியர்களின் விடிவெள்ளியாய் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 1984ஆம் ஆண்டு மே 6ஆம் தேதி மதுரையில் துவங்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் தமிழக மக்களின் பேராதரவுடன் ஆட்சிப் பொறுப்பில் இருந்த எம்ஜிஆர் ஆட்சியில் அரசு ஊழியர்கள் என்றாலே திமுக சார்புடையவர்கள்தான் என்ற கருத்து பரவலாக இருந்தது.

ஆகவே அன்றைய ஆட்சிக் காலத்தில் அரசு ஊழியர் அமைப்புகள் போராடுவதற்கு தயக்கம் காட்டின. அப்போதுதான் இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே மிக குறைந்த ஊதியம் பெற்று வந்த தமிழக அரசு ஊழியர்களின் உள்ளக் குமுறலை உணர்ந்து போர்க்குணமிக்க ஊழியர் நலன் சார்ந்த உழைப்பாளி மக்களின் உரிமை காக்கும் போராட்டங்களில் அரசு ஊழியர்கள் பங்கு பெறுவது அவசியமாகும் என்ற புரிதலோடும் குறிக்கோளோடும் உருவானதுதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

தற்போது அறுதி பெரும்பான்மையுடன் ஆட்சி பொறுப்பேற்று இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நினைவிற்காக…

1984இல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உதயமான பிறகு அன்றைய காலகட்டத்தில் கலைஞர் அவர்களை தமது மாநாடுகளுக்கு அழைப்பதையே தவிர்த்த சங்கம்தான் என்ஜிஓ சங்கம். அப்படிப்பட்ட காலகட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் **முதல் மாநில மாநாடு 1984ல் சென்னையில் நடைபெற்றபோது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான் துணிச்சலுடன் அன்று எதிர்க்கட்சிகள் வரிசையில் இருந்த டாக்டர் கலைஞர் அவர்களை அழைத்து கௌரவித்தது.** இவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று என்ஜிஓ சங்கத் தலைமை கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து பொல்லாங்கு கூறிய பிறகும், அரசு ஊழியர் சங்க மாநாட்டில் கலைஞர் அவர்கள் பங்கேற்றார்.

1986 செப்டம்பர் 12, 13 தேதிகளில் வேலூரில் நடைபெற்ற மாநில மாநாட்டில் பங்கேற்ற கலைஞர் ஆற்றிய உரை இன்றும் அரசு ஊழியர் நினைவில் இருக்கிறது.




அழைத்து வைத்து பேசி விவகாரங்களைக் தீர்ப்பதற்குக்கூட தயாராக இல்லாத நிலை

இம்மாநிலத்தில் உள்ளது. அது மாத்திரமல்ல கோரிக்கை எழுப்பினாலோ அவன் விரோதி; தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்தாலே அவன் பகைவன் என்பது மாத்திரமல்ல, அவன் ஒழித்துக் கட்டப்பட வேண்டியவன். அப்படிப்பட்ட ஒரு இயக்கம் இந்த மாநிலத்தில் இயங்கவே கூடாது என்று பழிதீர்க்கின்ற முனைப்போடு ஒரு பரிபாலனம் தமிழகத்தில் நடைபெறுகின்ற காரணத்தால்தான், **ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக் கறக்கிற மாட்டை பாடிக் கறக்க வேண்டும். அடித்துக் கறக்கிற மாட்டை அடித்துக் கறக்க வேண்டும் என்ற பழமொழியில் மூன்றாவது வழிதான் அரசு ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது** எனவும், அரசாங்கத்திற்கு சுலபமான வழி ஒன்று இருக்கிறது. பொதுமக்களை தூண்டி விடுகின்ற வழி. இந்தியாவிலேயே அரசு ஊழியர்களுக்கு நாங்கள்தான் அதிகமாக தருகிறோம் என்று அமைச்சர்கள் பொய்களை அவிழ்த்து விடுவதில் சமர்த்தர்கள். பொதுமக்கள்கூட சம்பளமும் சலுகைகளும் இங்குதான் அதிகம் தருகிறார்களாமே அப்படியிருக்க அரசு ஊழியர்கள் ஏன் போராட வேண்டும். பொது மக்களை அரசு ஊழியர்க்கு எதிராக திருப்ப இந்த அரசு செய்கின்ற முயற்சிக்கு நீங்கள் ஆட்பட்டு விடக்கூடாது எனவும், இவர்களுக்கு தெரிந்த ஒரு பெரிய கலை என்னவென்றால் எந்த ஒரு இயக்கம் உருவானாலும் ஒற்றுமையோடு ஒருமைப்பாட்டு தன்மையோடு உரிமைக்குரல் கொடுக்க ஒரு இயக்கம் எங்கே உருவானாலும் அதை இரண்டாக பிரிப்பது, அந்த இயக்கத்தை தன்னுடைய காலடியில் வந்து சரணாகதி அடையக்கூடிய தொண்டரடிப் பொடியாழ்வார்கள் யார் இருக்கிறார்கள் என்று பொறுக்கி எடுத்து, நாம் கேட்கின்ற கோரிக்கைகள் எல்லாம் அவர்களை விட்டு கேட்கச் சொல்வது, அப்படி கேட்டபிறகு அவர்கள் கேட்டதில் ஒன்றையோ... இரண்டையோ... நிறைவேற்றுவது மறுநாள் சென்னையில் உள்ள சுவரெங்கும் நன்றி நன்றி என சுவரொட்டி ஒட்டுவது, இப்படி ஒரு பிரித்தாளும் சூழ்ச்சியை இன்றைக்கும் விடாப்பிடியாக தமிழக அரசு பிடித்துக் கொண்டு அரசு ஊழியர்களை, ஆசிரியர் பெருமக்களை, பாட்டாளி பெருமக்களை மாசுபடுத்தி அந்தப் பிரிவிலேயே தன் ஆதிக்கத்தை செலுத்தலாம் என்று கனவு கண்டு கொண்டு இருக்கிறது எனவும், **சில நேரங்களில் தீர்ப்புகள் தாமதப்படலாம், ஆனால் நல்ல தீர்ப்பு என்றைக்கும் நியாயத்தின் பக்கம் தான் இருக்கும் என்ற நம்பிக்கையோடு பாடுபட வேண்டும்.** அப்படி பாடுபடக்கூடிய அணி தான் இந்த அணி எனவும் அழுத்தந்திருத்தமாக கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

கலைஞர் மீண்டும் கலந்து கொண்ட நமது 3வது மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது. மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டும் உரிய பலன்கள் பெரும்பாலானவர்களுக்கு கிடைக்காததன் காரணமாக ஒரு பக்கம் அதிருப்தி நிலவிக் கொண்டு இருந்த நிலையில், மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது.

அப்போது முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் பங்கேற்று நமது ஆசான் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் எம்.ஆர்.அப்பன் மற்றும் மாநில நிர்வாகிகள் ஊதிய நிர்ணயத்தில் இருந்த குறைபாடு சுட்டிக்காட்டிப் பேசிய பிறகு அரசு ஆணை பெருமளவிலான அதிருப்தியையும், வேதனையும் உருவாக்கியுள்ளன என்று குறிப்பிட்டீர்கள். **வேதனை என்ற வார்த்தையை இந்த அரசு இருக்கும் போது தயவு செய்து பயன்படுத்தாதீர்கள். உங்களுடைய சங்கத்திற்கு** நிச்சயமாக ஒரு அனாமலி கமிஷன் முரண்பாடுகளை ஆராய்வதற்காக ஒரு குழு அமைப்பது என்பது ஏற்கத்தக்க கொள்கை அல்ல என்பது தெரியும். எனவே இருக்கின்ற குறைபாடுகளை தொடர்ந்து கலந்து பேசி அந்தக் குறைபாடுகள் நிச்சயமாக இந்த அரசு தீர்க்கும் என்ற நம்பிக்கையும் உங்களுக் கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி தொடர்ந்து கடந்த காலங்களில் டாக்டர் கலைஞர் முதல்வராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தபோது எங்களது மாநாடுகளில் வந்து சிறப்பித்துள்ளார். அவர்கள் ஆற்றிய உரைகள் இன்னும் ஊழியர்கள் மத்தியில் மீண்டும் மீண்டும் நினைக்க தோன்றுகிறது.

கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சி மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராக செயல்படும் இந்த அதிமுக ஆட்சியை அப்புறப்படுத்திவிட வேண்டும் என்ற அடிப்படையில் தான், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரையில் ஜனவரி 2021, 27ஆம் நாள் துணிச்சலாக 1984 டாக்டர் கலைஞர் அவர்களை அழைத்தது போல், எதிர்க்கட்சித் தலைவரும் திமுக தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டில் முதன்முதலில் காணொலி காட்சி மூலம் பேச வைத்த அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். அந்த மாநில அளவிலான மாநாட்டில் பங்கேற்று அதிமுக அரசு பறிக்கப்பட்ட அத்தனை கோரிக்கைகளையும் கழக அரசு வந்தவுடன் நிறை வேற்றப்படும் என்று பேசியது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நம்பிக்கை ஏற்படுத்தியது. ஆனால் 2001-22இல் நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை புறக்கணிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் சார்பில் சட்டமன்றத்தில் கடந்த 13ஆம் தேதி ஆகஸ்ட் மாண்புமிகு நிதியமைச்சர் சமர்ப்பித்துள்ள 2021-22க்கான நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பு 9 மாதத்திலிருந்து 12 மாதமாக உயர்த்தியது, அரசு ஊழியர் இறந்தால் 3 லட்சம் என்பது 5 லட்சம் குடும்ப நல நிதி உயர்த்தியதை வரவேற்கின்றோம்.

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு திமுக அரசு பொறுப்பேற்றுக் கொண்டு 100 நாட்களில் கடந்த நிலையில் மக்களுக்கான அடிப்படை நலத்திட்டங்களை அறிவித்து வருவதோடு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டப்பேரவையில் மேலும் பல மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து வருவது பாராட்டுக் குரியது. குறிப்பாக தொழில் படிப்புகளிலும், அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு வழிவகை செய்யும் சட்ட மசோதா சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

அதே நேரத்தில் தேர்தல் கால வாக்குறுதிகள் ஒருபுறம் இருக்க, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை மக்களுக்கு எதிராக திசை திருப்பும் வகையில், அரசு ஊழியர், ஆசிரியர்களின் உணர்வுகளை புறம்தள்ளி, கொரோனா பெருந்தொற்று காலத்தில் உயிரை துச்சமென மதித்து மக்களுக்கான பணியை செய்து கொண்டிருக்கும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒரு நாள் கூட சம்பளம் ஓய்வூதியம் இழக்காமல் ஊதியம் பெற்று வருகின்றார்கள் எனவும், தொலைக்காட்சியில் பேட்டியில் பேசியுள்ளார். அதுமட்டுமல்ல நிதிநிலை அறிக்கையில் நிதி வருவாயில் ஒரு ரூபாயில் 19 பைசா ஊதியத்திற்காகவும், 8 பைசா ஓய்வூதியத் திற்காகவும் செலவிடப்படுகிறது என்ற விபரத்தை பொதுவெளியில் வெளியிடுவது மக்களுக்கு எதிரானவர்களாக அரசு ஊழியர் ஆசிரியர்களை சித்தரிக்க முயன்று வருகிறார்.

எனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பேச்சு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தியையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நிதியமைச்சர் அவர்கள் பேச்சை வன்மையாக கண்டித்து பத்திரிகை செய்தி உடனே வெளியிட்டோம்.

அதுமட்டுமல்ல வெள்ளை அறிக்கையில் தமிழக அரசின் ஒட்டு மொத்த வருமானத்தில் 2006-07இல் சம்பளம் மற்றும் ஊதியம் 27.95 சதவீதம் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்கள் 14.22% இருந்த நிலையில் 2020-21ல் 24.92 மற்றும் 10.50% குறைந்துள்ளது. இதே காலகட்டத்தில் மானியங்கள் 12.65%லிருந்து 19.33% கூடியுள்ளது. இதிலிருந்து தெரிகிறது தமிழ்நாட்டில் மட்டும் நிதிச்சுமை அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதிய தாரர்கள் காரணமல்ல என்பதை தெரியப்படுத்த விரும்புகிறோம்.

இவ்வாறு வெள்ளை அறிக்கையில் அறிவித்து விட்டு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கொரோனா தொற்று காரணமாக அகவிலைப்படி முடக்கப் பட்டது, சரண்டர், ஜிபிஎப் வட்டி குறைக்கப் பட்டது பல கோடி ரூபாய் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இந்த காலகட்டத்தில் இழந்துள் ளோம் என்பதை மறந்து ஒன்றரை ஆண்டுக்கு பிறகு ஒன்றிய அரசு 11% அகவிலைப்படி அறிவித்த நிலையில் மாநில அரசும் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கும் என்று எதிர்பார்த் திருந்த நிலையில், இந்த கொரோனா நோய்த் தொற்று காலத்தில் அரசின் நிவாரணப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு,

மக்களை காக்கும் பணியில் ஈடுபட்டு பல நூற்றுக் கணக்கான ஊழியர்கள் இறந்த நிலையிலும், உயிரை துச்சமென மதித்து களப்பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கும் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய அகவிலைப் படி உயர்வை 1.4.2022 முதல் வழங்கப்படும் என்று அறிவிப்பு பெரும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியை யும் ஏற்படுத்தியது.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 2002ஆம் ஆண்டு தமிழகத்தின் 94% ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்கு செலவிடப்படு கிறது என்று கூறினார். அது மட்டுமல்ல பல்வேறு சலுகைகளை ரத்து செய்து ஓய்வூதியப் பலன்களை பத்திரமாக தந்தார். அதை எதிர்த்து எழுச்சியான போராட்டத்தை நடத்திய வரலாறு அனைத்து தோழர்களுக்கும் தெரிந்ததே. எந்த முதலமைச் சரால் 1,74,000 பேர் பணிநீக்கம் செய்யப்பட் டோமோ அதே முதலமைச்சரால் போராட்டத்தின் எழுச்சியினால் மீண்டும் அனைவரையும் பணிக்கு அமர்த்திய வரலாறு படைத்த அமைப்புதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

அப்போது தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் 94% ஊதியம் மற்றும் ஓய்வூதியம் செலவிடப் படுகிறது என்று தமிழக அரசு சொல்வது தவறான புள்ளி விவரம் என்று மறுத்ததோடு, ஆளுகின்ற அரசு தனது கீழ் பணியாற்றும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியம், ஓய்வூதியத் தினை சுமையாகக் கருதக் கூடாது. அரசின் திட்டசெலவினமாகவே கருத வேண்டும் என்ற கருத்தினை தெரிவித்தார் என்பதை தமிழக அரசுக்கு நினைவூட்டுகிறோம்.

## 16.8.2021 அன்று ஆயிரம் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம்

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் நமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்ப்பு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் இருந்தது. அது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக நமது சங்கத்தின் மாநில மையம் பட்ஜெட் அறிவித்த ஆகஸ்ட் 13ம் தேதி உடனே கூடி திமுக தேர்தல் வாக்குறுதி யில் இடம் பெற்றுள்ள நமது கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு ஏதும் இல்லாத இந்த இடைக்கால பட்ஜெட்டில் அறிக்கையில் இல்லை. குறிப்பாக அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதியம் மீண்டும் நடைமுறைபடுத்தப் படும், சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும், தொகுப்பூதியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும், **சாலைப் பணியாளர்களின் 41 மாத பணிநீக்கக் காலத்தை பணிக்காலமாக வரைமுறைப் படுத்த ஒன்றிய அரசு அறிவித்த** அகவிலைப் படி 11% அறிவிக்காதது, தமிழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள நாலரை லட்சம் காலிப் பணி யிடங்கள் நிரப்பப்படும் உள்ளிட்ட கோரிக்கைகள் அரசு ஊழியர்கள் பெரிதும் எதிர்பார்த்த எந்தவிதமான அறிவிப்பும் இடைக் கால நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்படாதது அரசு ஊழியர் மத்தியில் அரசின் மீது கோபத்தை ஏற்படுத்தியது.

எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் 1000 அலுவலகங்கள் முன்பு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் தமிழகம் முழுவதும் மிகசக்தியாக, எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. உண்மையில் கடந்த காலங்களில் நடைபெற்ற இயக்கங்களை மிஞ்சுகின்ற வகையில் மாவட்ட மையங்கள், உணர்வுபூர்வமாக களத்தில் இறங்கிய ஊழியர்கள் நலனுக்காக, எதிராக எந்த ஆட்சி வந்தாலும் அதை எதிர்த்து களம் காணும் அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்பது கடந்த பிப்ரவரி 2021, 19ல் நிரூபித் தோம். அதை மீண்டும் தற்போது நிரூபித்துள் ளோம்.

தமிழகம் முழுவதும் இந்த ஆர்ப்பாட்டம் 742 இடங்களில் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்ற இயக்கமாக இருந்தது. அதன் வெளிப்பாடுதான் தோழர்களே, அரசு பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில்

மாவட்ட மையங்கள் செயல்பாடு பாராட்டுக்குரியது.

மாண்புமிகு முதல்வரின் தலையீட்டின்பேரில் மாநில மையத்திற்கு அரசு மனிதவள மேலாண்மை துறை செயலாளர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு 15.8.2021 அன்று அரசிடமிருந்து தொலைபேசி மூலம் அழைப்பு.

## 16.8.2021 அனைத்து மாநில நிர்வாகிகள் சென்னைக்கு வருகை

அரசு மாநில மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் அவர்களுடன் 16.8.2021 காலை நமது சங்கத்தின் தர்மபுரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு விரிவாக நமது கோரிக்கைகள் குறித்து ஒரு மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து உள்துறை செயலாளர் உடன் பிற்பகலில் மாநில நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. கோரிக்கைகள் குறித்து முதல்வர் கவனத்துக்கு சென்று முதல்வரைச் சந்திக்க தலைமைச் செயலாளரிடம் பேசி உரிய ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தார்.

ஆயிரம் இடங்களில் ஆர்ப்பாட்டம் ஊழியர்கள் மத்தியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமல்ல, நமது அமைப்பின் பேரில் உச்சபட்ச மரியாதையும், ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக என்றும் போராடும் அமைப்பு என்பதை தமிழகத்தில் உள்ள அதிகாரிகள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது என்பது மிகையல்ல தோழர்களே.

புதிதாக அரசு பதவியேற்றவுடன் கோரிக் கைகள் மறுக்கும் பட்சத்தில் போராட்டத்தை அறிவித்த அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். அதோடு மட்டுமல்ல போராட்டம் நடத்திக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தினோம் என்பது நமது அமைப்பு போர்க்குணம் அமைப்பு என்பது அரசிற்குத் தெரிவித்துள்ளோம்.

மேலும் தமிழக அரசு பட்ஜெட்டில் ஒரு சில துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது என்றும் குறிப்பாக காவல்துறை, ஆசிரியர், அறநிலையத் துறை, பொதுப்பணித் துறை, மருத்துவ துறை என்று கூறப்பட்டுள்ளது. இது தமிழகத்தில் உள்ள அனைத்து துறை காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

கடந்த அதிமுக ஆட்சியில் தமிழக அரசு ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக போராடிய போது ஊதிய மாற்ற குறைபாடுகள் உள்ளிட்ட கோரிக்கைகளை அதிமுக அரசு எந்த உருப்படி யான நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், ஊழியர்களின் கோரிக்கைகளை பேசி தீர்வு காண்பதற்கு பதிலாக போராட்டம் நடத்தியவர்கள் பல்வேறு அடக்குமுறைகளை ஏவி விடப்பட்டது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரியும். திமுக ஆட்சிக்கு வந்தால் ஊதிய முரண்பாடுகள் களைவதற்கு சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும், திமுக தேர்தல் அறிக்கையின் வாயிலாக அரசு ஊழியர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வெகுவாக எதிர்பார்த்த பழைய பென்ஷன், அகவிலைப்படி 11%, சிறப்பு காலமுறை ஊதியம் ரத்து, தொகுப்பூதிய முறை ரத்து, வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும் போன்ற அறிவிப்புகள் எதுவும் இல்லாதது அரசு ஊழியர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை தந்துள்ளது.

## 27.8.2019 மீண்டும் அரசுடன் பேச்சுவார்த்தை

மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவின்படி சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. தமிழக அரசின் சார்பில் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ்.கிருஷ்ணன் இ.ஆ.ப., மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன் இ.ஆ.ப. ஆகியோருடன் பேச்சுவார்த்தையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக பொதுச் செயலாளர் ஆ.செல்வம் கலந்து கொண்டார். பேச்சுவார்த்தை யின்போது தர்மபுரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவ பேரவை அறைகூவல் தீர்மானங்கள் அடங்கிய எழுத்துப்பூர்வமான முறையீடு வழங்கியும் மற்றும் பிரதான கோரிக்கையான 11% அகவிலைப்படி உடன்

வழங்கிட வேண்டும். குறிப்பாக பேச்சுவார்த்தை யில் அரசு ஊழியர்கள் ஒன்றரை ஆண்டுகளாக ஏராளமான இழப்புகளை சந்தித்துள்ளோம். பல்வேறு மாநிலங்களில் அகவிலைப்படி 11% அறிவித்ததை சுட்டிக்காட்டி வழங்கவேண்டும். தேர்தல் கால வாக்குறுதியில் புதிய பென்சன் திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துதல், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், மேலும் எம்ஆர்பி செவிலியர்கள் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள தொகுப்பூதியம், மதிப்பூதியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், காலிப் பணியிடங்கள், 21 மாத நிலுவை, சாலைப் பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலமாக வழங்க வேண்டும், புதிய காப்பீடு திட்டத்தில் உள்ள குறைபாடு களைதல், மத்திய அரசு ஊழியர் களுக்கு வழங்கிய படிகள், வேலைநிறுத்த காலங்கள் பணிக்காலமாக வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை விரிவாக 1.30 மணி நேரம் பேசப்பட்டது. நிதித்துறை கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் உங்களது கோரிக்கையை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு தீர்வு காண்பதாக உறுதியளித்தார்.

அரசு செயலரிடம் இவ்வாறான பிரச்சினை குறித்து அரசுடன் நடத்தின பேச்சுவார்த்தை ஆரோக்கியமானதாகவும், அரசுக்கும், அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே நல்லுறவினை ஏற்படுத்துகிறது என்று கூறினோம். அப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அளித்த வாக்குறுதியின்படி புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய புதிய திட்டத்தையே அமல்படுத்துவோம் என கூறினார். இது தொடர்பான அறிவிப்பு இந்த நிதிநிலை அறிக்கை யில் இல்லாதது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 1984 முதல் மாநில மாநாட்டில் டாக்டர் கலைஞர் அவர்களை எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போது அழைத்தோம். 1986 இரண்டாவது மாநில மாநாட்டிற்கும் அழைத்தோம். 1989ல் 3வது மாநில மாநாட்டிற்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் பங்கேற்று (42 ஆண்டுகள் கழித்து 1988 போராட்டத்தின் மூலம்) மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கினார்கள். அதேபோல் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது ஜனவரி 2021 மாநில அளவிலான மாநாட்டில் மதுரையில் காணொலி மூலம் பங்கேற்று அதிமுக அரசு பறித்த கோரிகக்கள், மறுக்கப்பட்ட சலுகைகள் அனைத் தும் கழக அரசு வந்தால் வழங்கப்படும் என்று பேசியது மிகுந்த நம்பிக்கையை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தியது. தற்போது அந்த நம்பிக்கையில் இருக்கிறோம்.

அதன் அடிப்படையில் கடந்த காலங்களில் எங்களது மாநில மாநாட்டில் டாக்டர் கலைஞர் அவர்கள் பங்கேற்றதுபோல், கடந்த 25.7.2021ல் நடைபெற்ற மாநில செயற்குழுவில் 14வது மாநில மாநாடு சென்னையில் நடத்துவது, அந்த மாநில மாநாட்டிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை அழைப்பது என மாநில செயற்குழு முடிவாற்றப்பட்டது.

எனவே மேற்காணும் எங்களது நியாயமான கோரிக்கையை பரிசீலித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசி உரிய அறிவிப்புகளை நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழக முதலமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. தமிழக அரசு நமது கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால் ஊழியர்களை அணிதிரட்டி விரிவான போராட்டங்களை நடத்த வேண்டியது தவிர்க்க இயலாததாகிவிடும்.

ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! முன்னேறுவோம்!!! ■

**இரத்த தானம் செய்வோம்!**
**உயிர்களைக் காப்போம்!**

# விழுப்புரத்தில் மறுக்கப்பட்ட பதவி உயர்வு ஆணையை மீண்டும் பெறுதல்



**ஜா**க்டோ-ஜியோ போராட்டத்தில் எழுச்சியாக கலந்து கொண்டதன் காரணமாக 25 மாதமாக மறுக்கப்பட்ட பதவி உயர்வு விடாப்பிடியான தொடர் போராட்ட வாயிலாக 23.08.2021 துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு ஆணை பெற்றேன்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி பிரிவு) அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

என்னுடன் சங்க வழிகாட்டி ஆசான் தோழர். ஆ.ஜா. பார்த்தீபன், தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்க மாநிலச் செயலாளர், தோழர்.ஏ.ஏகாம்பரம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்ட துணைத்தலைவர், ஜெ.ஜெய்சங்கர், மாவட்டத் தலைவர், தமிழ்நாடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், விழுப்புரம், தோழர் சு.சிவகுமார் மாவட்ட செயலாளர், தமிழ்நாடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், விழுப்புரம், தோழர்.ப.கேசவலு, மாவட்ட தலைவர், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம், தோழர் அசோகன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க விழுப்புரம் மாவட்ட இணைச் செயலாளர், ஜெ.ரமேஷ் தலைவர், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் மாவட்ட ஆட்சியரக கிளை, கணேசன் அலுவலக மேலாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிப் பிரிவு விழுப்புரம் ஆகியோர் உடனிருந்தனர். ■

# அகவிலைப்படி ஆகாயத்திலிருப்பவர்க்கா?

'ஏழையின் தலையில்
தடவக்கூட எண்ணெயில்லை
அகவிலைப்படி கேட்கிறீர்களே'
ஏழைப் பங்காளர் உதிர்ந்த முத்து

'பெட்டிக்குப் பூட்டு இருக்கிறது
பூட்டுக்கு சாவி இருக்கிறது
பெட்டியைத் திறந்து பார்த்ததில்
காலியாக இருக்கிறது'
பேரறிஞரின் பெரும்புலம்பல்

'கருணையிருக்கிறது
நிதியில்லை
கஜானாவும் காலி
களஞ்சியமும் காலி'
உலகத் தமிழினத் தலைவரின் உருக்கம்(?)

'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'
மக்கள் திலகத்தின் மகிமை

'உங்களுக்காகவே நான்
எனக்காகவே நீங்கள்'
தனக்கான தலைவியின் தெளிவுரை

'எவ்வளவு கொடுத்தாலும் போதாதென்பார்கள்'
கொங்கு மண்டலத்தின் கூக்குரல்

'சமூக நீதி பின்பற்றி அகவிலைப்படி'
கழுநீரில் நழுவும் மீனாய்
வெள்ளை அறிக்கை நாயகன்

அகவிலைப்படி ஆகாயத்திலிருப்பவர்க்கா?
மக்கள் என்போரில்
அகவிலைப்படிக்குரியோர் அகற்றமா?

ஆளும் வர்க்க அலப்பறைகள்
நீளும் பட்டியலாய் அறிவுரைகள்(?)
கேட்டுப் புளித்தவை இவை

ஓட்டுக் கேட்கையில் சொன்னவை
கோட்டுப் போட்டு மறைப்பவை
வேட்டு வைப்பதில் பின்னவை
காட்டும் கைப்பக்குவம் கண்டவை

சொன்னவை மறப்பது வேடிக்கை
செய்பவை சொல்லாதது கேளிக்கை
ஏமாற்றினால் ஏமாறுவது வாடிக்கை

- பேரணமல்லூர் சேகரன்

# தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி அரசு ஊழியர்கள் 1000 இடங்களில் ஆர்ப்பாட்டம்

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், கொரோனா காலத்தில் முடக்கப்பட்ட அகவிலைப்படி, சரண்டர் விடுப்பு வழங்க வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி, ஊர்ப்புற நூலகர்கள், எம்.ஆர்.பி.செவிலியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், குழந்தைகள் பாதுகாப்பு திட்ட ஊழியர்கள், வன பாதுகாப்பு ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், அவுட்சோர்சிங் ஊதிய முறையில் பணிபுரிபவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், அரசுத்துறையில் காலியாக உள்ள நாலரை லட்சம் பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி 16.08.2021 அன்று தமிழகம் முழுவதும் 1000 இடங்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என மாநில செயற்குழு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## தருமபுரி

தருமபுரி வட்டத்தில் தருமபுரி நகராட்சி அலுவலகம், அரசு மருத்துவக் கல்லூரி, வேளாண் வணிகத்துறை இணை இயக்குநர் அலுவலகம், சுகாதாரப்பணி இணை இயக்குநர் அலுவலகம், சார்நிலை கருவூலம், வட்டாட்சியர் அலுவலகம், பிடிஓ அலுவலகம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு வட்டக்கிளை தலைவர் ஜெயவேல் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் சி.எம்.நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் சிறப்புரை யாற்றினர். நிர்வாகிகள் மாதையன், சிவம், அசோகன், பன்னீர் ராஜ்கண்ணு ஆகியோர் பேசினர்.

நல்லம்பள்ளி வட்டாட்சியர், பிடிஓ அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு வட்டத் தலைவர் சந்திரன் தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் பிரபாகரன், மகளிர் துணைக் குழு மகேஸ்வரி ஆகியோர் பேசினர்.

காரிமங்கலம் பி.டி.ஓ அலுவலகம், பேரூராட்சி, வட்டாட்சியர் அலுவலகஙகளில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டச் செயலாளர் முனிரத்தினம் தலைமை வகித்தார். நிர்வாகிகள் சபரி, சின்னசாமி, சந்திரன் ஆகியோர் பேசினர்.

பாப்பிரெட்டிபட்டி வட்டத்தில் பேரூராட்சி, வட்டாட்சியர் அலுவலகம், பிடிஓ அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் துக்கு வட்டத் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் முனிராஜ் மற்றும் சிவசந்திரன் ஆகியோர் பேசினர்.

தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் பென்னாகரம் வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் நாகவேணி தலமையில் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. வருவாய் ஊழியர் சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் வி.ராஜிவ்காந்தி, அரசுஊழியர் சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் செ.காவேரி ஆகியோர் கண்டனவுரை ஆற்றினார். ரமணி நன்றி கூறினார்.

பாலக்கோடு பேரூராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகி குணசேகரன் பேசினார். ஆகமொத்தம் மாவட்டத்தில் 34 இடங்களில் இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திருச்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, காஜா மலை பல்துறை கட்டிடம், நெடுஞ்சாலை துறை அலுவலகங்கள், மணிகண்டம், இலால்குடி, தொட்டியம், தா.பேட்டை, துறையூர், வையம்பட்டி, உப்பிலியாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், மணப்பாறை அரசு மருத்துவமனை பேக்மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட 13 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து துறை.ஊழியர்கள், துறை வாரி சங்க நிர்வாகிகள், மாவட்ட மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டத்

தலைவர் பால்பாண்டி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம் வரவேற்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் பழனிச்சாமி கண்டன கோரிக்கை விளக்க உரையாற்றினார். சிராஜீயுதின், சகாதேவன், ராம்ராஜ், சக்திவேல், கேஎம். இராஜேந்திரன், தினகரன் மற்றும் சுரேஷ் பிரபு வாழ்த்துரை வழங்கினர்கள். இறுதியில் மாவட்ட பொருளாளர் சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

## திண்டுக்கல்

மாவட்டத்தில் துணைப் பதிவாளர் கூட்டுறவு அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், அரசு தலைமை மருத்துவமனை, வேடசந்தூர் தாலுகா அலுவலகம், நெடுஞ்சாலை உதவிக் கோட்ட பொறியாளர் அலுவலகம், வேடசந்தூர் பேரூராட்சி அலுவலகம், மாவட்ட கருவூலம், திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகம், கிழக்கு தாலுகா அலுவலகம், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், வத்தலகுண்டு பேரூராட்சி அலுவலகம், நிலக்கோட்டை தாலுகா அலுவலகம், கொடைக்கானல் வட்டாட்சியர் அலுவலகம், நத்தம் வட்டாட்சியர் அலுவலகம், ஒட்டன்சத்திரம் தாலுகா அலுவலகம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர் தாலுகா அலுவலகம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், குஜிலியம்பாறை தாலுகா அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு முறையே

சி.பாஸ்கரன், மாவட்டச் செயலாளர் எஸ்.முபாரக் அலி, எம்.மகாமுனி, விஜயகுமார், ஏ.நாராயணன், விஜயராஜ், டி.நந்தகோபால், ராதிகா, சிக்கந்தர், எஸ்.அக்பர், எஸ்.பிச்சைவேல், எஸ்.முருகேசன், சுரேஷ்குமார், கே.முத்து, பச்சமுத்து, எஸ்.அழகர்சாமி, டி.பழனிச்சாமி, கே.இளங்கோ, மகாராஜன், ராஜாராம், ராஜாத்தி, ஏ.அழகுமயில் ராஜா ஆகியோர் தலைமையேற்றனர்.

மேற்கண்ட ஆர்ப்பாட்டங்களில் மாநில துணைத் தலைவர் ஆர்.மங்கலபாண்டியன், மாவட்டச் செயலாளர் எஸ்.முபாரக் அலி, மாவட்ட நிர்வாகிகள், பிச்சைவேல், எம்.சுகந்தி, பாண்டி அரசு, ஏ.அழகுமயில் ராஜா, டி.மகாலிங்கம், டி.நந்தகோபால், வி.ஜெயபால், டி.ராஜமாணிக்கம், ஏ.நாராயணன், எஸ்.முருகேசன், ஜெ.எஸ்.விஜயகுமார், எஸ்.ஜெயராசன், எஸ்.அழகர்சாமி, கே.இளங்கோ, நிர்மலா கிரேஸி, ரமேஷ்வரன், ஏ.மணிக்காளை, சதீஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## நாகப்பட்டினம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், கீவளூர் ஊராட்சி ஒன்றியம், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் போன்ற இடங்களில் நடைபெற்றது.

## திருவாரூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மன்னார்குடி வட்டம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## சேலம்

மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. ■

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கத்தின் சார்பில் முதல்வருக்கும், அமைச்சருக்கும் நன்றி

நெடுஞ்சாலைத் துறையில் பி.பி.எம்.சி. (செயல்திறன் அடிப்படையில் பராமரிப்பு ஒப்பந்தம்) திட்ட செயலாக்கம் கைவிடப்படுவதாக சட்டப்பேரவையில் அறிவிப்பு செய்த தமிழ்நாடு முதலமைச்சருக்கும், பொதுப்பணி கட்டிடங்கள் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சருக்கும் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மா.பாலசுப்பிரமணியம், பொதுச் செயலாளர் ஆ.அம்சராஜ் ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர். மேலும் சாலைப்பணியாளர்களுக்கு ஊதியத்தில் 10 % ஆபத்துப்படி, நிரந்தர பயணப்படி, சீருடை சலவைப்படி உள்ளிட்டவற்றை நடப்பு கூட்டத் தொடரில் நிறைவேற்றித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். ■

## அரசு ஊழியர்-ஆசிரியர்களை மக்கள் விரோத சக்திகள் போல் சித்தரித்து வரும் மாண்புமிகு தமிழக நிதி அமைச்சரை கண்டித்து ஊடக செய்தி

*ஊடகச் செய்தி செய்தி 10/2021* *நாள்.24.08.2021*

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு. அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி

*பஞ்சப்படியை பறித்ததோடல்லாமல் அரசு ஊழியர்-ஆசிரியர்களை மக்கள் விரோத சக்திகள் போல் சித்தரித்து வரும் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களை வன்மையாக கண்டிக்கிறோம்.*

*தமிழகத்தில் ஆட்சி மாற்றம் - அரசு ஊழியர், ஆசிரியர்கள் நெஞ்சம் நெகிழத் தேவையில்லை. வஞ்சம் இன்னும் மாறவில்லை என தோன்றுகிறது.*

*நிதி அமைச்சர் அரசு ஊழியர், ஆசிரியர்களைப்பற்றி சட்டப்பேரவையிலும், ஊடகங்களிலும் அவதூறாக பேசி வருவது.....*

*தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு திராவிட முன்னேற்ற கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டு 100 நாட்கள் கடந்த நிலையில் மக்களுக்கான அடிப்படை நலத் திட்டங்களை அறிவித்து வருவதோடு, மேலும் தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவை நிதி-நிலை அறிக்கையில் மேலும் பல மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து வருவது பாராட்டுக்குரிய நிகழ்வாகும்.*

*அதே நேரத்தில் தேர்தல் கால வாக்குறுதிகள் ஒருபுறமிருக்க சட்டப்பேரவையிலும், ஊடகங்கள் வாயிலாகவும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அரசு ஊழியர், ஆசிரியர்களை மக்களுக்கெதிராக திசைதிருப்பும் வகையில் அரசு ஊழியர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு உணர்வுகளை புறம்தள்ளி, கொரோனா பெருந்தொற்று பேரிடர் காலங்களில் உயிரை துச்சமென மதித்து பல்வேறு இன்னல்களுக்கிடையே மக்கள் பணியினை மேற்கொண்டு வரும் நிலையில் தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இக்காலத்தில் ஒரு நாள் கூட சம்பளம் / ஓய்வூதியம் இழக்காமல் பெற்று வருகின்றனர் எனவும் தொலைக்காட்சி பேட்டியில் அரசு ஊழியர், ஆசிரியர்களை மக்களுக்கு எதிராக திசைதிருப்பும் வகையில் ஏளனமாக பேசி வருகிறார். மேலும் தமிழக அரசின் நிதி அறிக்கையில் நிதி வருவாயில் ஒரு ரூபாயில் 19 பைசா ஊதியத்திற்காகவும், 8 பைசா ஓய்வூதியத்திற்காகவும் செலவிடப்படுகிறது என்ற புள்ளிவிவரத்தை அளித்துவிட்டு ஊடகங்களில் 1 ரூபாயில் 65 பைசா ஊதியம், ஓய்வூதியத்திற்காக செலவிடப்படுகிறது என்ற தவறான விவரங்களை பொது வெளியில் தெரிவித்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மக்களுக்கு எதிரானவர்களாக சித்தரிக்க முயன்று வருகிறார்.*

*எனவே, தமிழக அரசாங்கம் ஒன்றிய அரசிடமிருந்து கூடுதல் நிதி பெறுவது, அதைத் தொடர்ந்து முறையாக வரி வசூலிப்பது மற்றும் தமிழக அரசின் நிதி நிலைமை சீராக்க சாத்தியமான வழிவகைகளை ஆராயாமல் அரசு ஊழியர், ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பாக மாண்புமிகு நிதி அமைச்சர் தொடர்ந்து தவறான தகவல்கள் மட்டுமின்றி செய்தி வெளியிட்டு வருவதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.*

*மாநில அரசிற்கு எதிரான ஒரு வழக்கில் (2013(2)* SCC *516* "para *53)உச்ச நீதிமன்றம் ஒரு நல்லாட்சி அரசாங்கம் அதன் ஊழியர்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூறியுள்ளதை இங்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*``மாநில அரசின் பங்கு என்பது ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஒரு முன்மாதிரி முதலாளியாக இருக்க வேண்டும், எதிர்காலத்தில் ஊழியர்களின் உரிமைகோரிக்கைகளின் பேரில் சினம் கொள்ளாமல் அது இருக்கும் என்ற எதிர்பார்ப்பையும், பொறுப்பில்லாத அலட்சியப் போக்குடன் பெரிய அளவில் விலகி நின்று வேடிக்கை பார்க்காது என்ற நம்பிக்கையையும், ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அது எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் நம்பிக்கை நீர்த்துப்போகும் சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. ஒவ்வொரு ஊழியரின் நம்பிக்கையும், மதிப்பும் மகிமையும் வாய்ந்தது. அதை முன்மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு ஏமாற்றமாகவோ, துரோகமாகவோ மாற்றி அவர்கள் பணியேற்றத்தில் சதுரங்க விளையாட்டு ஆடக்கூடாது. அமைதி உணர்வும், சிரத்தையான நேர்மையும் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்க வேண்டும். நம்பகமான சூழல் நிலவவேண்டும். ஊழியர்கள் அனைவரும் தாங்கள் கண்ணியத்துடனும் நேர்மையாகவும் நடத்தப்படுகிறோம் என்றும், தங்கள் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாது என்றும் நிச்சயமாக நம்ப வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்ற கருத்துப்படிமம் உறுதிப்படும்.''*

*அரசு ஊழியர்கள் அனைவரும் இந்த அரசை மேற்கூறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே நம்பி வருகிறோம். அரசும் அரசு ஊழியர், ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளையும், தங்களது தேர்தல் வாக்குறுதியினையும் வெளிப்படைத் தன்மையுடன் பரிசீலித்து கோரிக்கைகளை / வாக்குறுதிகளை மொத்தமாக இல்லாவிடினும் கூடுமான அளவில் நிறைவேற்றும் சூழல் ஏற்படவேண்டும் என்று விரும்புகிறோம். அப்போதுதான் அரசு நிர்வாகமும், மக்கள் திட்டப்பணிகளும் தொய்வின்றி நடக்கும், சமூகத்தில் நலமும் வளமும் செழிக்கும்.*

*மேலும், இன்றைய உலகமயமாக்கல் சூழலில் அதிகரித்துவரும் விலைவாசி உயர்வு, பணவீக்கம் ஆகியவற்றோடு இன்றைய பேரிடர் காலத்தில் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு மேலும் அதிகரிக்கும் என்று ஊடகங்களில் உண்மைக்கு மாறான கருத்து திணிப்பு பரவலாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.*

*அதே நேரத்தில் வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ள நிதி அமைச்சர் அரசு ஊழியர், ஆசிரியர்களின் ஊதியம்-ஓய்வூதிய செலவினம் குறைந்து சுருங்கி வருவதும், மானிய செலவினம் உயர்ந்து வருவதை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.*

*2006-07-இல் மொத்த வருவாய் செலவினத்தில் சம்பளம் மற்றும் ஊதியங்கள் 27.95 சதவீதமும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வு காலப் பலன்கள் 14.22 சதவிகிதமாக இருந்த நிலையில் 2020-21-இல் முறையே 24.92 சதவீதம் மற்றும் 10.50 சதவீதமாக குறைந்துள்ளது. இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி என்னவெனில், 2009 மற்றும் 2017-இல் ஊதியக்குழு பரிந்துரையின் பேரில் ஊதிய மாற்றத்திற்கு பிறகும் இது கணிசமாக குறைந்துள்ளது. நிதித்துறையின் வெள்ளை அறிக்கையில் அட்டவணை 41-இல் இது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதே காலக்கட்டத்தில் மானியங்கள் 12.65 சதவீதத்திலிருந்து 19.33 சதவீதமாக உயர்ந்துள்ளது. எனவே நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளபடி தமிழ்நாட்டின் நிதிச்சுமை மற்றும் அளவற்ற கடன் சுமைக்கு எவ்வகையிலும் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் காரணமல்ல என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறோம். எனவே இதுபோன்ற தவறான இட்டுகட்டு செய்தியை பரப்பி மக்களை திசை திருப்பும் செயலை நிதி அமைச்சர் நிறுத்திக் கொள்ள வேண்டும்.*

*மத்திய அரசின் தவறான பெருளாதார கொள்கைகளும், நிதிப்பங்கீடும் மாநில அரசுகள் நிதிப்பற்றாக்குறையை எதிர்கொள்ளும் நிலைமைக்கு ஆட்படுத்தியுள்ளன என்பதை அரசுஊழியர், ஆசிரியரகள் அறியாதவர்கள் அல்ல. அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கான ஊதியச் செலவு அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை மக்களிடம் கொண்டு*

செல்வதற்கான முதலீட்டுச் செலவு என்ற அடிப்படையில் ஊதிய செலவிற்கான செலவுகளை ஈடுகட்டுவதற்கு மத்தியஅரசிடமிருந்து கூடுதலான நிதி ஒதுக்கீட்டை மாநில அரசு பெறுவதற்கான நிர்வாகம் மற்றும் அரசியல் ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவவாறான நடவடிக்கைகளுக்கு எமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இவ்வரசிற்கு உறுதுணையாக இருக்குமென உறுதிபட தெரிவித்துக்கொள்கிறோம்.

*அரசு ஊழியர் - ஆசிரியர்கள்*

*வாழ்விலும் தாழ்விலும்*

*தலைவர் டாக்டர் கலைஞர்*

*கடந்த 2003ல் செல்வி ஜெயலலிதா அவர்கள் அரசு ஊழியர், ஆசிரியர்களின் உரிமைகளை காலால்போட்டு மிதித்தபோது கடந்த 15.07.2003 அன்று கலைஞர் அவர்கள் முரசொலி இதழில் பின்வரும் எதிர்ப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.*

*அமைப்பு ரீதியாகவோ - அமைப்பு சார்ந்து இல்லாமலோ உழைக்கும் வர்க்கத்தை உதாசீனப்படுத்தாமல் அந்த வர்க்கத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது என்பது அடுத்த கட்டமாக இருப்பினும்; முதல் கட்டமாக அந்த உணர்வுகளைக் காலில் போட்டு மிதிப்பது என்பதை அனுமதிப்பதைவிட அவமானகரமான செயல் வேறெதுவும் இருக்க முடியாது. அதனை அனுமதிக்கவும் முடியாது. இன்று தவறினால் நாளை; நாளை தவறினால் நிச்சயம் ஒரு நாள் கூனனும் நிமிர்வான் - குருடனும் கண் திறப்பான் - நொண்டியும் நடப்பான் - முடவனும் முஷ்டியை உயர்த்துவான் !*

*மிஞ்சினால் கெஞ்சுவான் என நம்பி; மிடுக்குடன் தற்காலிகமாகத் தர்பார் நடத்த முடியுமே தவிர - அவன் எதற்கும் அஞ்சிடாமல் அணிவகுத்துக் கிளம்பிவிட்டால்; எரிமலையையே மத்தாப்புக் கொளுத்துவான் ! என்பதை வரலாறு கூறுகிறது ; அதை வசதியாக மறந்து விடக்கூடாது!*

*அவன் என்ன ; கொடுக்கும் ஊதியததை இனி இரட்டிப்பாக்குக என்றா கேட்டான் - புதிதாகவா போனஸ் கேட்டான் - ஓய்வூதியப் பயன்களை ஒன்பது மடங்கு உயர்த்துக என்றா கேட்டான் - சரண்டர் விடுப்பு சலுகை என ஒன்றை அறிமுகம் செய்திடுக என்றா கோரினான் - அய்யோ; பாவம் அவன் எதையும் புதிதாகக் கேட்கவில்லையே!*

ஏற்கனவே பெற்றுவந்த உரிமைகளையும் சலுகைகளையும பறித்துக் கொண்டீர்களே; அதைத் திரும்பக் கொடுங்கள் என்றுதான் அறப்போர் வியூகம் வகுத்தான். இழந்ததைப் பெறத்தான் போராடினான் - இருப்பதையும் இழப்போம் என அவன் எதிர்பார்க்கவில்லை.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதுபோன்று அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு எதிராக பேசிவரும் நிதியமைச்சரின் பேச்சினையும், செயலினையும் தரப்படுத்தி தமிழக அரசு; அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் வாழ்வாதார கோரிக்கையினை நடைபெற்றுக்கொண்டிருக்கும் சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டுமென தமிழக முதல்வரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

| | |
|---|---|
| **(மு.அன்பரசு)** | **(ஆ.செல்வம்)** |
| மாநிலத் தலைவர் | பொதுச் செயலாளர் |

# வாசிப்பை நேசித்தவர் தோழர் தே.லட்சுமணன்: முதலாமாண்டு நினைவு தினத்தில் தலைவர்கள் புகழாரம்

**வா**சிப்பை நேசித்தவர் தோழர் தே.லட்சுமணன் என அவரது முதலாமாண்டு நினைவு தின கூட்டத்தில் தலைவர்கள் புகழாரம் சூட்டினர்.

உழைக்கும் மக்களின் ஒப்பற்ற தலைவரும், மனித நேயரும், மாற்றுத்திறனாளிகள் சங்கத்தை உருவாக்கியவருமான தோழர் தே.லட்சுமணன் முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி அவரது படத்திறப்பு விழாவும், புகழஞ்சலிக் கூட்டமும் தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக் குழு சார்பில் சென்னை கேரள சமாஜத்தில் செவ்வாயன்று (ஆக. 24) நடைபெற்றது.


அவரது படத்தை திறந்து வைத்து மாநிலத் தலைவர் எஸ்.நூர்முகமது பேசுகையில், மாற்றுத்திறனாளிகளுக்காக, சிறுபான்மை மக்களுக்காக, சமூக மாற்றத்திற்காக தனது இறுதி மூச்சுவரை உழைத்துக் கொண்டிருந்தார். எந்நேரமும் ஏழை எளிய பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகள் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பார்.

காரல் மார்க்சைப் போல், பாரதியாரைப் போல் டி.எல். பேசப்பட்டுக் கொண்டிருப்பார். அவர் விட்டுச்சென்ற பணிகளை முன்னெடுப்போம், அவர் வழியில் நடப்போம் என்றார்.

கூட்டத்திற்கு தலைமை தாங்கி மாநில பொதுச் செயலாளர் எம்.ராமகிருஷ்ணன் பேசுகையில், அரசு வேலையை உதறிவிட்டு மக்கள் பணியாற்ற வந்தவர். அனைத்து நூல்களையும் தேடித் தேடி படிப்பார். வரலாற்று நிகழ்வுகளை அவருடன் இருக்கும் நபரிடம் சுருக்கமாக புரியும்படி எடுத்துரைப்பார். மாற்றுத் திறனாளி சங்கம் உருவாக முக்கிய பங்காற்றினார். சிறுபான்மை மக்களுக்காக பெருபான்மை மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அவர் செங்கல்பட்டில் பாரதி மன்றத்தை உருவாக்கி அதன் ஆலோசகராக இருந்து முற்போக்கு கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்றவர் என்று புகழாராம் சூட்டினார்.

தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் பொதுச் செயலாளர் என்.நம்புராஜன் பேசுகையில், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு பள்ளியை துவக்குவதற்கு தூண்டுகோலாக இருந்தவர். அந்த பள்ளி தொடங்கி தற்போது 25 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த பள்ளியில் இலவசமாக ஏழை எளிய பிரிவினருக்காக செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் இருக்கக் கூடிய 250க்கும் மேற்பட்ட சிறப்பு பள்ளிகளை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கி அதற்கும் தலைவராக இருந்து திறம்பட செயல்பட்டவர். இன்று மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் 1,500 ரூபாய் உதவித் தொகை பெறுகிறார்கள் என்றால் அதற்கு காரணம் தோழர் டி.எல்.தான். தற்போது 4 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் அந்த உதவித் தொகையை பெற்று பயன் பெறுகிறார்கள்.

மாற்றுத்திறனாளிகள் சங்கத்தை உருவாக்கவும் தூண்டுகோலாக இருந்தவர். 15 லட்சத்திற்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். எனவே அவர்களுக்காக ஒரு தனி துறையை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவர். மாற்றுத்திறனாளிகளுக்கென ஒரு தனி துறை உருவாக்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு முக்கிய காரணம் டி.எல்.தான் என்று பெருமையுடன் சுட்டிக் காட்டினார். தோழர் டி.எல். ஒரு துல்லியமான வழிகாட்டி, துணிச்சலான முடிவெடுக்கக் கூடியவர் என்று புகழாரம் சூட்டினார்.





எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் பேசுகையில், புத்தகங்களை அதிகம் வாசிக்கக் கூடியவர். புத்தகங்களை வாசிப்பதோடு மட்டுமல்லாமல் அதுகுறித்து விவாதிப்பார். தவறு இருந்தால் தைரியமாக சுட்டிக் காட்டுபவர். அவரது பையில் புத்தகம் இல்லாமல் அவரை பார்க்க முடியாது. என் தந்தையைப் போல் என்னிடமும் என் குடும்பத்தாரிடமும் நலம் விசாரிப்பார்.

மக்களுக்காக அர்ப்பணிப்போடு செயல்பட்டவர். அவரை குறித்து ஆவணப்படம் எடுக்க வேண்டும் என்று கூறிய போது, என்னை விட சிறப்பாக இந்த மக்களுக்காக பணியாற்றிய என்.சங்கரய்யா போன்ற தலைவர்களுக்கெல்லாம் ஆவணப்படம் எடுக்கப்பட்டதா என்ன? எனவே எடுக்கக் கூடாது என்றார். எதிலும் தன்னை முதன்மைபடுத்திக் கொள்ளாதவர். அவரது இழப்பு சாதாரண மக்களுக்கு பேரிழப்பு என்றார்.

கல்வியாளர் தாவூத்மியகான் பேசுகையில், தோழர் டி.எல். மனிதநேய மிக்கவர், பண்பாளர். மாற்றுத்திறனாளிகளின் புறக்கணிப்பு குறித்து தெளிவாக எடுத்துரைப்பார். எங்கள் காயிதே மில்லத் கல்லூரியில் மாணவர் சேர்க்கையின் போது முதல் சேர்க்கை தகுதியுள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களின் சேர்க்கைதான். அதற்கு காரணம் தோழர் டி.லட்சுமணந்தான்.

கல்லூரி சார்பில் விருது வழங்க வேண்டும் என்ற போது பொதுவுடைமைத் தோழர்களுக்கு வழங்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். அந்த அடிப்படையில் தோழர் என்.சங்கரய்யா வுக்கு விருது வழங்கி பண முடிப்பு வழங்கி னோம். உடனே அவர் அந்த பணத்தை ஏழை மாணவர்களுக்கு பயன்படுத்துங்கள் என திருப்பிக் கொடுத்து விட்டார். அதேபோல்தான் தோழர் நல்லக்கண்ணுவும் திருப்பி அளித்து விட்டார். சொந்த வாழ்க்கையிலும், அரசியலிலும் நேர்மை யானவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். சகோதரத் துவத்தை, சமூக நீதியை பாதுக்காப்பவர்கள் கம்யூனிஸ்டுகள். எனவே பொதுவுடமை இயக்கத்தை பலப்படுத்துவதே, நாம் அவருக்கும் செலுத்தும் மிகப்பெரிய அஞ்சலி என்றார்.

அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத்தலைவர் மு.அன்பரசு பேசுகையில், அரசு ஊழியர்கள் அவரை டி.எல்.ஒ. என்று அழைப்போம். ஏனென்றால் அரசு சொத்துக்களை பாதுகாக்க இரட்டை பூட்டு அலுவலர் (டபுள் லாக்கர் ஆபிசர்) என்ற ஒரு பதவி உண்டு. அதுபோல் அரசு ஊழியர் சங்கத்திற்கு இரட்டை பூட்டு அலுவலராக இருந்து செயல்பட்டார்.

கிராம உதவியாளர்களுக்கு ஊதிய உயர்வு கோரிக்கையை முன்வைக்கும் போது, ஊதிய உயர்வு கோரிக்கையை விட அங்கு நிலவும் தீண்டாமையை முதலில் ஒழிக்க வேண்டும் என்றவர். அவரின் தீண்டாமை ஒழிப்பு பணியை மேற்கொண்டு சமூகத்திலிருந்து தீண்டாமையை அகற்ற பாடுபடுவோம் என்றார்.

பாதிரியார் மரிய வின்செண்ட் பேசுகையில், அவர் அறிவின் ஊற்று, அனுபவத்தின் ஆற்றல். தனது இறுதி மூச்சு வரை சமூக மாற்றத்திற்கான விதைகளை விதைத்துக் கொண்டிருந்தார். அவர் விட்டுச் சென்ற தடத்தில் பின் தொடர்வோம் என்றார்.

மாநில துணைத் தலைவர் ஹாஜி மூசா பேசுகையில், தோழர் டி.எல். அனைவரிடத் திலும் அன்பாக பேசக்கூடியவர், எளிமையானவர். அவரை சோகமாக பார்க்கவே முடியாது. பாமரனுக்கும் புரியக் கூடிய வகையில் பேசுபவர். அவர் ஓர் நடமாடும் பல்கலைக்கழகம். அவர் எனக்கு பேராசிரியர், அரசியல் ஆசான் என்று புகழாரம் சூட்டினார்.

இதில் மார்க்சிஸ் கம்யூனிஸ் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் ப.சுந்தர்ராஜன், சிகரம் ச.செந்தில்நாதன் (தமுஎகச), ஓய்வுபெற்ற காவல் துறை அதிகாரி, தோழர் டி.எல். சகோதரர் டி.கிருஷ்ணமூர்த்தி, அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில நிர்வாகி ஆர்.ஜோதி, அரசு ஊழியர் அனைத்துறை ஓய்வுதியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் நெ.இல.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லிமாரோஸ், சிறுபான்மை நலச் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் ப.மாரிமுத்து ஆகியோரும் பேசினர். முன்னதாக மத்திய சென்னை அமைப்பாளர் எம்.ஜலாலுதீன் வரவேற்றார். வடசென்னை செயலாளர் கே.கார்த்தீஷ்குமார் நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநிலப் பொருளாளர் எம்.அகமது உசேன், சிபிஎம் மாவட்டச் செயலாளர்கள் எல்.சுந்தர்ராஜ், ஜி.செல்வா, ஏ.பாக்கியம், சி.சங்கர், எஸ்.கோபால், இ.சங்கர், செங்கை பகுதி மூத்த உறுப்பினர் ராஜலட்சுமி நரசிம்மன், தோழர் டி.எல். குடும்பத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ■

# அரசு ஊழியரின் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ. 3 லட்சத்திலிருந்து ரூ. 5 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்ட அரசாணை

TAMIL NADU GOVERNMENT SERVANTS' FAMILY SECURITY FUND SCHEME – Lumpsum amount payable in case of death of Government employees while in service – Enhancement from Rs.3,00,000/- to Rs.5,00,000/- Orders - Issued.

**Finance (Pension) Department**

G.O.(Ms) No.197, **Dated:01.09.2021.**
**Pilava, Aavani – 16,**
**Thiruvalluvar Aandu - 2052.**
**Read:-**

1. G.O.Ms.No.1515, Finance Department, dated: 03-12-1973.
2. G.O.Ms.No.101, Finance (Pension) Department, dated: 03-02-1975.
3. G.O.Ms.No.265, Finance (Pension) Department, dated: 01-04-1985.
4. G.O.Ms.No.704, Finance (Pension) Department, dated: 10-07-1989.
5. G.O.Ms.No.531, Finance (Pension) Department, dated: 19-07-1991.
6. G.O.Ms.No.501, Finance (Pension) Department, dated: 14-08-1996.
7. G.O.Ms.No.483, Finance (Pension) Department, dated: 12-09-1997.
8. G.O.Ms.No.131, Finance (Pension) Department, dated: 21-02-2006.
9. G.O.Ms.No.57, Finance (Pension) Department, dated: 22-02-2016

*******

ORDER:

The Tamil Nadu Government Servants' Family Benefit Fund Scheme, subsequently renamed as Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme was launched with effect from 1-1-1974, as a self insurance scheme without involving Life Insurance Corporation of India to support the family of Government employees including those in temporary and non-pensionable service, persons in foreign service and on deputation (menials paid from contingencies) and persons borne on provincialised work-charged establishments and All India Service Officers belonging to Tamil Nadu cadre, who die in harness. The subscriber's contribution under the scheme was initially fixed at Rs.10/- p.m. deducted from the pay bill. The lumpsum amount payable in the case of death of the subscribers while in service was fixed at Rs.10,000/-

2. The monthly contribution and lumpsum amount payable under this scheme were revised from time to time. In the Government Order ninth read above, it was ordered to deduct a sum of Rs.60/- p.m. as subscribers' contribution and to pay a sum of Rs.3,00,000/- as lumpsum amount in the event of death of the Government servant under this scheme with effect from 01.02.2016.

3. The Hon'ble Minister for Finance and Human Resources Management of Tamil Nadu in the Budget Speech 2021-2022 on 13-08-2021 has announced that, "the lumpsum grant from the Family Security Fund paid to the family of a Government employee who dies while in service will be enhanced from Rs.3 lakh to Rs.5 lakh. Accordingly, the subscription to the Fund shall be enhanced to Rs.110/- per month. This benefit is also applicable to the employees covered under Group Insurance Scheme".

4. Accordingly, the Government issues the following orders:-

i. The lumpsum amount payable under Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme shall be enhanced to Rs.5,00,000/-

ii. The employees contribution under this scheme shall be enhanced to Rs.110/- p.m with effect from September 2021 and this contribution will continue till the superannuation of the Government employees.

iii. The existing rules and other instructions governing the Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme shall continue.

5. The above Orders shall take effect from 01-09-2021. ■

# தென்காசி மாவட்ட சிறப்பு பேரவை



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தென்காசி மாவட்ட சிறப்பு பேரவை 4-9-21 அன்று தென்காசி மேலகரம் சமுதாய நலக்கூடத்தில் நெல்லை மாவட்ட தலைவர் தோழர் வீ.பார்த்தசாரதி தலைமையில் மிக எழுச்சியாக நடைபெற்றது முன்னதாக அரசு ஊழியர் சங்க கொடியை நெல்லை மாவட்ட தலைவர் வீ.பார்த்தசாரதி அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன பதாகையை மாநில துணை தலைவர் என்.வெங்கடேசன் அவர்களும் ஏற்றி வைத்தனர் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின் கூட்ட அரங்கில் கூட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்க மாவட்ட துணை தலைவர் செ.மைதீன் பட்டாணி வாசித்து அஞ்சலி செலுத்தப்பட்டது நெல்லை மாவட்ட செயலாளர் க.துரைசிங் வரவேற்புரையுடன் எழுச்சியுரையாற்றினார். மாவட்ட சிறப்பு பேரவையை மாநில செயலாளர் தோழர் சி.எஸ்.கிறிஸ்டோபர் துவக்கி வைத்து எழுச்சியுரையாற்றினார். அனைத்து துறை ஓய்வூதியர் சங்க தென்காசி மாவட்ட தலைவர் சலீம் முகம்மது மீரான் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நெல்லை மாவட்ட முன்னாள் தலைவர் பெ.பாலுச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில துணைத் தலைவர் என்.வெங்கடேசன் புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து மிக எழுச்சியாக நிறைவுரையாற்றினார். பல்வேறு தீர்மானங்கள் மாவட்ட நிர்வாகிகளால் முன்மொழியப்பட்ட பின் மாவட்ட தலைவர் மு.திருமலை முருகன் அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வில் பல்வேறு துறைகளை சார்ந்த 180 தோழர்கள் கலந்து கொண்டனர். ■

---

## தேன்கனிக்கோட்டைவட்டக் கிளை மாநாடு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தேன்கனிக்கோட்டை 14வது வட்டக் கிளை மாநாடு 28.08.2021 அன்று தேன்கனிக்கோட்டை எஸ்.ஏ.பி. மஹாலில் நடைபெற்றது. மாநாட்டின் முதல் நிகழ்வாக அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை வட்ட தலைவர் என்.அன்பழகன், அ.இ.மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் ஏற்றி வைத்தனர். தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்திய பின் வட்ட தலைவர் என்.அன்பழகன் தலைமையில் மாநாடு துவங்கியது. இணைச் செயலாளர் பி.மதியழகன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். துணைத் தலைவர் சி.திருநாவுக்கரசு வரவேற்றார். மாவட்ட இணைச்செயலாளர் சி.கல்யாணசுந்தரம் மாநாட்டை துவக்கி வைத்துப் பேசினார். வேலை அறிக்கையை செயலாளர் எஸ்.முருகேசன், வரவு - செலவு அறிக்கையை பொருளாளர் எம்.ராஜண்ணா ஆகியோர் முன்மொழிந்தனர்.

சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பாக எஸ்.பசப்பா, சாலைப் பணியாளர் சங்கத்தின் சார்பாக எம்.மாதப்பன், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.எம். மஞ்சுளா, கே.ஜெகதாம்பிகா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.மாவட்ட பொருளாளர் சி.தேவராஜ் சிறப்புரையாற்றினார். பின்னுர் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தலைவராக சி.திருநாவுக்கரசு, துணைத் தலைவர்களாக வி.முரளி, வி.சுகந்து பிரியன், செயலாளராக எஸ்.முருகேசன், இணைச் செயலாளர்களாக கே.சீனிவாசன், எம்.ராஜண்ணா, பி.பிரவீண், கே.கல்யாணசுந்தரம், பொருளாளராக யு.சம்சுல் ஆலம், மாவட்ட செ.கு.உ எம்.வள்ளியப்பன், தணிக்கையாளர்கள் எம்.ஜெயா, ஜெ.சாந்தி ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். ஓய்வுபெற்ற வட்டக் கிளை தலைவர் என்.அன்பழகனுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப்பட்டார்.

வட்டக் கிளையின் சார்பாக 2021ஆம் ஆண்டு உறுப்பினர் சந்தா 300, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா 50 மாவட்ட மையத்திடம் வழங்கப்பட்டது. மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் சிறப்புரையாற்றிட மாவட்ட தலைவர் பி.சந்திரன் மாநாட்டு நிறைவுரையாற்றினார். வி.சுகந்து பிரியன் நன்றி கூறி மாநாட்டை முடித்து வைத்தார். மாநாட்டில் 68 பெண் ஊழியர்கள் உட்பட 92 பேர் கலந்துகொண்டனர். ■

# மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவின்ப
# தமிழக அரசுடன் 27.08.2021 அன்று பேச்சுவார்த்தை



தலைமைச் செயலகத்தில் அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பத்திரிகையாளர்களை சந்திக்கும் பொதுச் செயலாளர் ஆ.செல்வம்

தமிழக அரசின் சார்பில் நிதித்துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு.எஸ்.கிருஷ்ணன் இ.ஆ.ப மற்றும் மனித வள மேலாண்மை துறை செயலாளர் திருமதி.மைதிலி கே.ராஜேந்திரன் இ.ஆ.ப ஆகியோர் இன்று நண்பகல் 12.00 மணிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக பொது செயலாளர் ஆ.செல்வம் அவர்கள் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டார். இப் பேச்சுவார்த்தை 1.30 மணி வரை நடைபெற்றது.

பேச்சு வார்த்தையின் போது தருமபுரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவ பேரவை அறைகூவல் தீர்மானங்கள் அடங்கிய எழுத்துபூர்வமான முறையீடு வழங்கியும் மற்றும் பிரதான கோரிக்கையான 11% அகவிலைப்படி உயர்வினை உடனே வழங்க வலியுறுத்தியும் முறையீடு வழங்கி பேசப்பட்டது.

குறிப்பாக பேச்சு வார்த்தையில் அரசு ஊழியர்கள் கடந்த 1 1/2 ஆண்டுகளாக ஏராளமான இழப்புகளை சந்தித்துள்ளதையும் பல்வேறு மாநிலங்களில் அகவிலைப்படி உயர்வு வழங்கியுள்ளதையும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, உடன் 11% அகவிலைப்படி அறிவிக்க வேண்டும். மேலும் தி.மு.க தேர்தல் வாக்குறுதியில் கூறிய புதிய ஓய்வுதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்துதல்,சிறப்பு கால முறை ஊதியம் பெறும் சத்துணவு ,அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள் மற்றும் ஊர் புற நூலகர்களுக்கு வரையறுக்கப்பபட்ட ஊதியம், ஓய்வூதியம் மேலும் எம்.ஆர்.பி. செவிலியர் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் தொகுப்பூதியம், மதிப்பூதியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்குதல், காலி பணியிடங்களை நிரப்புதல், 21 மாத நிலுவை தொகை வழங்குதல், சாலை பணியாளர்களின் 41 மாத கால பணிநீக்க காலத்தை பணிக்காலமாக ஆணையிடுதல், புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உள்ள குறைகளை களைதல் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து விரிவாக பேசப்பட்டுள்ளது.

நிதித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் அவர்கள், உங்களது கோரிக்கையை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு காண்பதாக உறுதியளித்தார். *- மாநில மையம்/TNGEA*

# தோழர் இரா.பன்னீர்செல்வம் இல்லத் திருமணம்




TNGEA மேனாள் மாநில செயலாளர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் ஆர்.பன்னீர்செல்வம் அவர்களது இல்ல தஞ்சை மணவிழா நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள்.

தமிழ்நாடு வேளாண்மை துறை அமைச்சு பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் இரா.பன்னீர்செல்வம் அவர்களுடைய மகன் திருமண நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். உடன் முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.எம்.தியாகராஜன் மற்றும் முன்னாள் மாநில துணைத் தலைவர் எஸ். பார்த்திபன் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் உ.சண்முகம் ஆகியோரும் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். ■

# பிரசவ கால விடுமுறை 9 மாதத்திலிருந்து ஒரு வருடமாக உயர்வு குறித்த அரசாணை

**ABSTRACT**

Tamil Nadu Fundamental Rules - Maternity Leave - Enhancement of Maternity Leave from 9 months (270 days) to 12 months (365 days) - Orders - Issued.

---

**HUMAN RESOURCES MANAGEMENT (FR-III) DEPARTMENT**

G.O.(Ms) No.84, **Dated:23.08.2021.**

பிலவ வருடம் ஆவணி - 7

திருவள்ளுவர் ஆண்டு - 2052.

**Read:-**

1. G.O. (Ms) No.105, Personnel and Administrative Relorms (FR) Department, dated 07.11.2016.
2. G.O. (Ms) No.154, Personnel and Administrative Reforms (FR-I) Department, dated 05.12.2017

-----

**ORDER**

In the Government order first read above, orders were issued enhancing the Maternity Leave from 180 days to 270 days to married women Government servants, with lesS than two surviving children, which may be spread over from the pre-continement rest to post-confinement recuperation, with full pay at the option of the women Government servants. Accordingly, in the Government Order second read above, Rule 101(a) of the Fundamental Rules was also amended.

2. In the revised Budget for the year 2021-2022 presented in the Legislative Assembly on 13" August 2021, an announcement has been made by the Hon'ble Minister for Finance and Human Resources Management, for enhancing the period of maternity leave from 9 months to 12 months for women Government employees with less than two surviving children with effect from 01.07.2021.

3. The Government, after careful consideration order that the Matenity Leave admissible to married women Government servants with less than bwo surviving children, which is 9 months (270 days) at present, be enhanced to 12 months (365 days), with effect from 01.07.2021, with full pay, which may be spread over from the pre-confinement rest to post-confinement recuperation, at the option of the married Women Government servants. The women Government servants who proceeded on maternity leave prior to 1 July 2021 and continue to be on that leave on or after that date shall also be eligible for maternity leave for a period not exceeding 365 days in total

4. Necessary amendments to the Fundamental Rules will be issued, separately.

(BY ORDER OF THE GOVERNOR) ■

# டிஜிட்டல் ஜனநாயகம்

சமூக ஒப்பந்தத்தின் ஊடாக மக்களின் இறைமையை அரசு பெறுகின்றது. அதனடிப்படையில் நடைபெறும் ஆட்சியே ஜனநாயகம் எனப்படும்.

- பிரெஞ்சு மெய்யியலாளர் ரூசோ.

சமூக அமைப்பு முறை மாற்றமடைந்து கொண்டே வந்திருக்கிறது. இன்று நாம் வாழும் இந்த சமூக அமைப்பு முறையும் மாறும். நடைபெற்று வரும் இந்த மாற்றங்கள் என்பது தானாகவோ அல்லது தற்செயலாகவோ நிகழ்வதல்ல. பெருந்திரள் மக்களின் பங்கேற்போடுதான் அது சாத்தியப்பட்டிருக்கிறது.

- புராதன பொதுவுடைமை சமூகம்
- அடிமை முறை சமூகம்
- நிலவுடைமை சமூகம்
- முதலாளித்துவ சமூகம்

என சமூகம் பல படிநிலைகளைக் கடந்தே வந்துள்ளது. மன்னராட்சி முறையில் இருந்து ஜனநாயகம் அல்லது மக்களாட்சி என்று புதிய மையக்கரு கொண்டே இன்று நாம் வாழும் சமூகம் வடிவெடுத்துள்ளது.

மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சி - மக்களாட்சி என்று ஆபிரகாம் லிங்கன் கூறியதையும் ஒப்பு நோக்கி,

ஜனநாயகத்தை ஒரு அரசியல் கோட்பாடு மற்றும் சமூக அமைப்பின் ஒரு வடிவம்ம் எனக் கொள்ளலாம்.

ஜனநாயகம் என்பது மக்களாட்சி என்று நேரடி பொருள் கொடுத்தாலும்,

இறையாண்மை

அரசியல் சமத்துவம்

தனிநபர்கள் அல்லது அமைப்புகள் கடைபிடிக்க வேண்டிய சமூக நெறிகள்

என பல விழுமியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அது,

கருத்து சுதந்திரம்

ஊடக சுதந்திரம்

மதச்சார்பின்மை

ஜனநாயக அரசு (முடியரசு இல்லாமை)

சமத்துவத்திற்கான உரிமை (சட்டத்தின் அனைவரும் சமம்)

சிவில் சமூகத்தின் உரிமை

வாக்களிக்கும் உரிமை

தேர்தல்களின் தரம்

கல்வி சுதந்திரம்

என பல பண்புகளைக் கொண்டுள்ளது. மெய்யியல் அறிஞர் பிளேட்டோ, "ஜனநாயகம் என்பது ஒரு அழகிய வடிவிலான அரசாங்கமாகும். இது பல்வேறுபட்ட கோளாறுகள் நிறைந்தவையாகவும் உள்ளது" என்று கூறியதையும் கவனத்தில் கொாண்டு, குறைகள் இருக்கலாம் ஆனாலும், இத்தகைய சமூக அமைப்பு முறையில் வாழும் நாம் அதற்கு இடையூறு வருகின்ற போதெல்லாம் அதைப் பாதுகாக்கவும், மேலும் செழுமைபடுத்தி அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்குண்டு என்ற புரிதலும் வேண்டும்

## மழைக்கால கூட்டத்தொடர்

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் 2021 ஜூலை 19 முதல் ஆகஸ்ட் 13 வரை நடைபெற்றிருக்க வேண்டியது. இரண்டு நாட்கள் முன்னதாகவே முடித்துக் கொள்ளப்பட்டது. கூட்டத்தொடர் நடைபெற்ற நாட்களில் ஒரு நாள் தவிர மற்ற எல்லா நாட்களும் அவையில் ஏற்பட்ட அமளியின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் குறித்து மக்கள் பிரதிநிதிகள் விவாதிப்பதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. பெகாசஸ் ஸ்பைவேர் மென்பொருள் தொடர்பாக ஏற்பட்ட விவாதத்திற்கு தீர்வேதும் கிடைக்கப் பெறாமல் நூலறுந்த பட்டம் போல் அந்தரத்தில் அலைகழிக்கப்பட்டு விடப்பட்டது.

அதேநேரத்தில் இந்த அமளிதுமளிக்கு இடையே பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் தனியார்மயம், பாதுகாப்புத்துறை - உற்பத்தி பிரிவில் தனியார் மயம், வேலைநிறுத்தத் தடைச் சட்டம்ம் போன்ற சுமார் 30 சட்டமுன்வடிவுகள் சந்தடி சாக்கில் நிறைவேற்றப்பட்டு விட்டன.

இதனால் என்னென்ன பாதிப்புகள் வரும்? அதை எப்படி தீர்த்துக் கொள்வது? என்று

நாடாளுமன்றத்திற்கு வெளியே இனி மக்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மத்திய டிஜிட்டல் பட்ஜெட்

மத்திய அரசின் முதல் டிஜிட்டல் பட்ஜெட் 2021 பிப்ரவரி முதல் தேதியன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. காகிதமில்லா முறையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்திருப்பது அறிவியலின் வளர்ச்சியைக் குறிக்கிறது. நல்லது, ஆனால் விதை நெல்லை விற்று வீட்டு செலவுக்கு வைத்துக் கொள்வதைப்போல,

காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீடு 74%க்கு அனுமதி

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை 1.75 லட்சம் கோடிக்கு விற்பனை

என்பன போன்ற அம்சங்கள் அதில் அடக்கம். மக்கள் நாட்டை ஆட்சி செய்வதற்கான உரிமை கொடுத்தால் அரசின் சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையை எடுத்துக் கொள்வது ஜனநாயகத்தின் மாண்புகளுக்கு உகந்ததா என்பது குறித்து யோசிக்க வேண்டும்.

பட்ஜெட் கூட்டத்தொடர் முடிந்து, மழைக்கால கூட்டத் தொடரும் முடிந்தபிறகு அடடே கொஞ்சம் இரு கோவாலு... மறந்துட்டேன்... இப்பத்தான் ஞாபகத்துக்கு வருது...

என்பது போல, ‘‘தேசிய பணமாக்கல் திட்டம்’’ என்று மக்களுடைய கருத்துக்களையோ அல்லது மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையோ பெறாமல்,

400 ரயில்வே நிலையங்கள்

150 ரயில்கள்

25 விமான நிலையங்கள்

160 நிலக்கரி சுரங்க திட்டங்கள்

26,700 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள்

துறைமுகங்கள்

மின்திட்டங்கள்

என்று தேசத்தின் சொத்துக்களை குத்தகைக்கு விட்டு 6 லட்சம் கோடி திரட்டுவது என்று மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று தோள் தட்டிக் கொள்ளலாம்.

டிஜிட்டல் இந்தியா போல

இதுதான் டிஜிட்டல் ஜனநாயகமா?

## தமிழக டிஜிட்டல் பட்ஜெட்

தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக கணினி வழியிலான இ-பட்ஜெட் 2021 ஆகஸ்ட் 13 அன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

நியூயார்க் பஃபலோ யுனிவர்சிட்டியில் உயர் பட்டப் படிப்பு முடித்து, லேமன் பிரதர்ஸ் நிறுவனத்தில் சேவை மேலாளர், ஆஃப்ஷோர் கேபிடல் மார்க்கெட் நிறுவனத்தின் தலைவர், சிங்கப்பூர் ஸ்டாண்டர்ர் சார்டர்ட் வங்கியில் நிர்வாக இயக்குநர் என்று பணிபுரிந்த அனுபவங்களையெல்லாம் ஒன்றுதிரட்டி சாறு பிழிந்து, முதலில் வெள்ளை அறிக்கையாகவும், பிறகு நிதிநிலை அறிக்கையாகவும் வழங்கியிருக்கிறார் மாண்புமிகு நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள்.

அரசு ஊழியர்களாகிய நமக்கு சாறு பிழிந்த சக்கையைக்கூட கண்ணில் காட்டாமல் 2022 ஏப்ரல் வரை தள்ளிவைத்து விட்டார். கொரோனா பெருந்தொற்று காலத்தில் உயிரை துச்சமென நினைத்து 24 x 7 என்று மக்களுக்கு பணியாற்றிய அரசு ஊழியர்கள் முடக்கப்பட்ட 18 மாத அகவிலைப்படியை கேட்டால்...

ஏறுகின்ற விலைவாசிக்கு ஈடு செய்ய கொடுப்பதுதான் அகவிலைப்படி என்று சரியான விளக்கம் சொன்ன மாண்புமிகு நிதியமைச்சர் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி கொடுக்க இப்போது அரசிடம் நிதி இல்லை என்று ‘கொதிக்கிற எண்ணெய் சட்டியிலிருந்து தூக்கி கொளுந்துவிட்டு எரியும் நெருப்பில் போட்டதுபோல்’ கூறியிருக்கிறார்.

இது என்ன ஜனநாயகம்?

ஒருவேளை

டிஜிட்டல் ஜனநாயகத்தின் மறுபதிப்பா?

புரியவில்லை!

**செப்டம்பர் 15**
**அனைத்துலக மக்களாட்சி நாள்.**

■

# தமிழக அரசின் துறைகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான அரசாணை

**ABSTRACT**

BUDGET - Change of Nomenclature of certain Budget Publications - Ordered.

**FINANCE [BUDGET GENERAL-II,] DEPARTMENT**

G.O.(Ms) No. 177 Dated: 29.07.2021

*பிலவ வருடம், ஆடி - 13*

*திருவள்ளுவர் ஆண்டு 2052*

**Read:-**

1. G.O. (Ms).No.226, Home (Prison-1) Department, Dated: 08.06.2020.
2. G.O. (Ms). No.55, Personnel and Administrative Reforms (A) Department, Dated: 07.06.2021.
3. G.O. (Ms).No.382, Public (Special.B) Department, Dated: 12.07.2021
4. From the Secretary, Tamil Nadu Legislative Assembly Secretariat, D.O. Letter No.3890/2021-13, (TNLA (EC)). dated: 26.07.2021.

**ORDER:**

In the Government order first read above, orders were issued changing the nomenclature of the Prisons Department as Department of Prisons and Correctional Services

2. In the Government order second read above, orders have been issued to change the nomenclature of the certain Demands and amendments were issued to the Tamil Nadu Government Business Rules, 1978 and the Secretariat Instructions.

3. In the Government order third read above, orders have been issued for allocation of Business / Departments among Ministers for the newly constituted 16th Legislative Assembly

4. In line with the orders issued in Government Orders read above, it has been proposed to change the nomenclature of the Budget Publications of the related departments with effect from the Revised Budget Estimates 2021-2022.

5. In the reference fourth read above, the Estimate Committee of the Leglalature has approved the proposal in ita meetlng held on 16.07.2021. The Government, therefore, direct ohange of nomendlature of the below mentioned udget Publeationa with offect from the Revlsod Budget Estimate8 2021-2022 as follows:-

| Demand No. | | Existing Nomenolature of the Budget Publication | Revised Nomenelature of the Budgot Publicatlon |
|---|---|---|---|
| 05 | English | Agriculture Department | Agriculture and Famer's Welfare Department |
| | Tamil | வேளாண்மைத் துறை | வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை |
| | English | Animal Husbandty<br>(Animal Husbandry, Dairying and Fiaheries Department) | Animal Husbandry<br>(Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department) |

| | | | |
|---|---|---|---|
| 06 | Tamil | *கால்நடை பராமரிப்பு*<br>*(கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை)* | *கால்நடை பராமரிப்பு*<br>*(கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)* |
| 07 | English | Fisheries<br>(Animal Husbandny. Dairying and Fisheries Department) | Fisherles and Fishermen Welfare<br>(Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department |
| | Tamil | *மீன்வளம்*<br>*(கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை)* | *மீன்வளம் மற்றும் மீனவர் நலன்*<br>*(கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை)* |
| 08 | English | Dairy Development<br>(Animal Husbandry, Dairying and Fisheries Department) | Dairy Development<br>(Animal Husbandry Dairying, Fisheries and Fishermen Welfare Department) |
| | Tamil | *பால்வளம்*<br>*(கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை*<br>Environment | *பால்வளம்*<br>*(கால்நடை பராமரிப்பு, பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை)*<br>Environment and Climate Change |
| 15 | English | (Environment and Forests Department | (Environment, Climate Change and Forests Department) |
| | Tamil | *சுற்றுச்சூழல்*<br>*(சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை)* | *சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்*<br>*(சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை)* |
| 19 | English | Health and Family Welfare Department | Health and Family Welfare Department |
| | Tamil | *மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை* | *மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை* |
| 24 | English | Prisons<br>(Home, Prohibition and Excise Department) | Prisons and Correctionsl Services<br>(Home, Prohibition and Excise Department) |
| | Tamil | *சிறைச்சாலைகள்*<br>*(உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை)* | *சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்*<br>*(உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)* |
| 32 | English | Labour and Employment Department | Labour Welfare and Skill Development Department |
| | Tamil | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை |

| | | | |
|---|---|---|---|
| 35 | English | Personnel and Administrative Reforms Department | Human Resources Management Department |
| | Tamil | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | மனிதவள மேலாண்மைத் துறை |
| 40 | English | Irrigation (Public Works Department) | Water Resources Department |
| | Tamil | பாசனம் (பொதுப்பணித் துறை) | நீர்வளத்துறை |
| 45 | English | Social Welfare and Nutritious Meal Programme Department | Social Welfare and Women Empowernment Department |
| | Tamil | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | நமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை |
| 54 | English | Forests (Environment and Forests Department | Forests (Environment, Climate Change and Forests Department) |
| | Tamil | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை) | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) ■ |

## தோழர் எம்.ஆர்.அப்பன் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்

**தோ**ழர் எம்.ஆர்.அப்பன் அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம் தமிழ்நாடு அரசு ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள் சங்க கட்டிடத்தில் மாவட்டத் தலைவர் முனைவர் கா.பால் பாண்டி தலைமையில் 30.08.3021 அன்று நடைபெற்றது. எம்.ஆர். அப்பன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்டச் செயலாளர் பொ.பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் ஏ.பெரியசாமி, மாவட்ட துணைத்தலைவர் வி. ஜீவானந்தம், .சுரேஷ் பிரபு தலைவர் திரேடியோலாஜிகல் அஸிஸ்டெண்ட்ஸ் சங்கம், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் செந்தமிழ் செல்வன், மதிவாணன் மாவட்ட செயலாளர், மாவட்ட துணைத் தலைவர் சிராஜுதீன், ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள் சங்கத்தின் சண்முகம் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர் இறுதியில் மாவட்ட பொருளாளர் சுந்தர்ராஜன் நன்றி கூறினார். கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தஞ்சாவூரில் எம்.ஆர்.அப்பன் நினைவு தண்ணீர் பந்தல்

அரசு ஊழியர் சங்கத்தின் ஸ்தாபக தலைவரும், தொழிற்சங்க ஆசானுமாகிய தோழர் எம்.ஆர்.அப்பன் அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 30.08.2021 அன்று தஞ்சாவூர் மாவட்ட அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்டது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அருகில் ஈஸ்வரி நகர் பேருந்து நிறுத்தம் அருகில் தோழர் எம்.ஆர். அப்பன் நினைவாக பொதுமக்கள் ஆதரவோடு தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டு, தோழர் எம்.ஆர். அப்பன் அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் கோதண்டபாணி தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் ரெங்கசாமி வரவேற்று பேசினார். முன்னாள் மாநில செயலாளர் ஆர்.பன்னிர்செல்வம் எம்.ஆர்.அப்பன் அவர்கள் நினைவு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து நினைவேந்தல் உரை நிகழ்த்தினார். நிறைவாக தஞ்சாவூர் வடக்கு வட்டத் தலைவர் சுப்ரமணியன் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவு பெற்றது. பொதுமக்கள் உட்பட 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் ■

# இப்போது யார் கையில் இருக்கிறது சே குவாரா-வின்...துப்பாக்கி?



**மை** டியர் காம்ரேட்ஸ்,

ஜனநாயகத்திற்கும் அதிகாரத்திற்கும் இடையில் இந்த அரசியல் வாதிகள் ஆடும் ஆட்டங்களுக்கு பலிகடா பாவப்பட்ட சாமானிய மக்கள்தான். எதிர்கட்சியாய் இருக்கும்போது அடுக்கடுக்காய் அவிழ்த்துவிடப்பட்ட அத்தனை உறுதிமொழிகளும், ஆளும்கட்சியான பிறகு மறக்கப்படவோ அல்லது மறுக்கப்படவோ செய்வதுதான் இவர்களின் ஜனநாயகம், அது பிரதமராக இருந்தாலும் சரி முதல்வராக இருந்தாலும் சரி. “நான் பிரதமரானால் 100 நாட்களில் ஊழல்வாதிகள் ஸ்விஸ் வங்கியில் போட்டிருக்கும் பணத்தை கைப்பற்றி அதை இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனின் கணக்கிலும் ரூ.14 லட்சம் வீதம் டெபாசிட் செய்வேன் என்றும் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் சொன்னவரை நம்பி ஏமார்ந்து போன இளைஞர்கள். அதேபோல, நான் முதல்வரானால் பழைய பென்ஷன் திட்டம் திரும்பப் பெறப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்திருப்ப தோடு அதற்கு போனஸாக அகவிலைப்படியை யும் தராமல் தடுத்திருக்கும் இன்னொரு நபரை நம்பி ஏமார்ந்து போயிருக்கும் அரசு ஊழியர்கள். இத்தகைய வாக்குறுதிகளை வாரி வழங்கும் வள்ளல்களைப் பார்த்து வாய்மை, நேர்மை எல்லாம் மூச்சடைத்து நிற்கின்றன. கட்சிகள் தேர்தல் காலங்களில் கூறும் உறுதிமொழிகள் எல்லாம் உண்மையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்கிறது உச்ச நீதிமன்றம். பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலைகள் ஏறினால் அது அரசாங்கத் தின் கொள்கை முடிவு என்கிற அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டிருக்கிறோம் நாம். இங்கு கொழுத்த செல்வந்தர்களும் அதிகாரத்தில் தோய்ந்த பழுத்த அரசியல்வாதிகளும் சேர்ந்து “பாவம் பொழைச்சு போகட்டும் மக்கள்'' என்று ஏழைகளுக்கும் சாமானிய மக்களுக்கும் கருணை காட்டி ஏதாவது செய்தால்தான் உண்டு. இதன் பெயர்தான் அதிகாரம். இந்த அதி காரத் திமிரை எதிர்த்துக் கேட்போர்கள் தேசத் துரோகிகள் என்று முத் திரை குத்தப்படுவதும், ஜனநாயகத்தின் எதிரிகள் என அலைகழிக்கப் படுவதும் இன்றைய இளைஞர்களிடையே ஒரு வெறுப்பைத் தோற்றுவித்துள்ளது. இந்த வெறுப்பு கொஞ்சம் கொஞ்சமாக இளைஞர்கள் மனதில் நெருப்புக் கோளமாக மாறி வருகிறது. அதிகார பலத்திற்கு எதிரான சுதந்திரக் குரல் அவர்களுக்குள் வந்து சேர்ந்திருப்பதற்கான முகாந்திரங்கள் தென்படுகின்றன.

சென்ற வாரத்தில் ஒரு நாள் அலுவலகத்தில் நடந்து கொண்டிருந்த கொரோனா தடுப்பூசி முகாமிற்கு இரண்டாவது தவணை தடுப்பூசி போட்டுக்கொள்ள போயிருந்தேன். ஊசி போடும் மறைவிடத்தில் எனக்கு முன்னால் ஊசி செலுத்த நின்றுகொண்டிருந்த இளைஞர் முழுக்கை சட்டை போட்டிருந்ததால் அவருக்கு தடுப்பூசி செலுத்துவதில் செவிலியருக்கு அசௌகரியம் இருந்தது. அதனால் அவர் அந்த இளைஞரிடம் சட்டையை ஒரு பக்கமாக கழற்றச் சொன்னார். அந்த இளைஞர் பட்டனை அவிழ்த்ததும் அவருடைய உள் பனியனில் வரையப்பட்டிருந்த பெரிய முகம் தெரிந்தது. அதைப் பார்த்ததும் அந்த செவிலியர் ஊசியில் மருந்தை ஏற்றிக் கொண்டே ''ஏன் தம்பி நம்ம ஊர் ஆளுங்க படம் போட்ட பனியன் எதுவும் உனக்கு கிடைக்கலியா?'' என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞர், ''சிகுடர் இந்த பனியன்ல இருக்கறது படம் இல்லை பாடம். இதை பிளாட்பாரத்துல வாங்கலே பனியன் வாங்கிக் கொடுத்து பிரிண்ட் செஞ்சது.'' என்றார்.

அவர் சொன்ன பதில் செவிலியருக்கு மட்டுமல்ல, எனக்கும் ஆச்சர்யமாகத்தான் இருந்தது. "தம்பி நீங்க எந்த செக்ஷன்?'' என்று கேட்டேன். "ஹவுஸ் கீப்பிங்'' என்றார். "என்ன படிச்சிருக்கீங்க?'' என்றேன். கொஞ்சம் தயங்கி, "பி.ஈ. டிரிபிள் ஈ'' என்றார் சட்டையின் பட்டனை போட்டவாறே. "நீங்க போட்டிருக்கற படத்தில் இருக்கற சே குவாரா-வை நாங்க குறைவா சொல்லலை, ஆனால் அவர் அளவுக்கு நம்ம தமிழ்நாட்டுல அல்லது நம்ம இந்தியாவுல யாரும் தலைவர்கள் இல்லையா?'' என்றேன்.

"சார், நம்ம நாட்டுலயும் நிறைய தலைவர்கள் இருக்காங்க. ஆனா இவரைப் பார்த்ததும் இவர்மேல என்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஒரு வசீகரம் வந்துடுது. உலகு தாண்டி நேசிக்கப் படும் தலைவர்கள்ல ஒருத்தரா சே குவாரோ இருக்கறது ஒரு காரணம்னு நம்பறேன்'' என்ற இளைஞர், நான் பரவாயில்லை சார் பனியன்ல தான் சே குவாரா படம் போட்டிருக்கிறேன். வரிசையில ரெண்டு பேரு வர்றாங்க பாருங்க அதுல ஒருத்தன் இந்த சிஸ்டர் ஊசிபோடற இடத்துலயும் இன்னொருத்தன் இடது புற மார்புலயும் அவரோட முகத்தை பச்சை குத்தியிருக்காங்க.'' என்றார்.

அந்த இளைஞர் சொன்னது உண்மைதான். சே குவாரா-வின் கண்களிலிருந்து வீசும் காந்த சக்தி அதைப் பார்க்கும் விடுதலை வேட்கையுள்ள எந்த இளைஞனுடைய உயிரணுக்களிலும் மின்சாரம் பாய்ச்சும் தன்மை கொண்டது. சென்னை நகரின் சாலைகளில் செல்லும் சில இளைஞர்களின் பைக்குகளிலிலாகட்டும், மதுரையில் மாட்டுத் தாவணியில் நடந்து செல்லும் இளைஞனின் தலையில் கட்டப்பட்டிருக்கும் கைக்குட்டையி லாகட்டும், அமெரிக்காவின் சிலிக்கன் வேலி கார்ப்பரேட் அலுவலகத்தில் சில இளைஞர்களின் சட்டைகளில், டோக்கியோவின் இசை விடுதி களில் ஆடும் நபர்களின் சிலரின் முதுகுகளில், சிங்கப்பூர் ஏர்போர்ட், பாங்காக், ஜோகன்ஸ்பர்க் என உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் சிலருடைய உடம்புகளில் சே குவாரோவின் முகம் ஒட்டிக்கொண்டு அசைந்து நகர்ந்து கொண்டிருப்பதை இன்றும் நம்மால் பார்க்க முடிகிறதென்றால் அந்த நபர் ஒரு தேசத்துக்கு மட்டுமே உட்பட்ட நபராக இருக்க முடியாது என்பது உண்மைதான்.

சே குவாரோவின் உருவத்தை தங்களுடைய உடம்பில் உடையில் தாங்கி நிற்கும் ஒவ்வொரு இளைஞனுக்கும் சே குவாரோ பற்றி ஏதாவது தெரியுமா? அவரைப்பற்றி தெரிந்துதான் அவருடைய படத்தை தன்னுடைய உடலில் வரிந்துகொண்டு அவர்கள் நிற்கிறார்களா? என்ற சந்தேகம் எனக்கும் எழுந்ததுண்டு.




சே குவாரா மீது உலகமுழுவதிலுமுள்ள இளைஞர்களிடம் இந்த வசீகரம் எழுந்தது எப்படி என்பது வியப்பாகத்தான் இருக்கிறது. உலகம் முழுவதிலும் இளைஞர்களிடம் வசீகர அலையை ஏற்படுத்திய சார்லி சாப்ளின், மைக்கேல் ஜாக்சன், ஜாக்கிசான், ப்ரூஸ்லி போன்றவர்கள் இசை, சிரிப்பு, நடனம், போன்ற பொழுதுபோக்கு அம்சங்கள் மூலம் மக்களை இளைஞர்களை வசீகரப்படுத்தியவர்கள். ஆனால் சே குவாரா இந்த வரிசைகள் எதிலும் வரக்கூடியவர் அல்ல. அவரைப் பற்றிய சினிமாவோ இசைத்தட்டோ அல்லது பரபரப்பான புத்தகமோ எதுவும் தனிப்பட்ட முறையில் அவருக்கு இத்தனை பெரிய புகழை சேர்க்கவில்லை. பின் எது சேர்த்தது?

அதிகாரத்திற்கெதிராக அவர் எழுப்பிய சுதந்திரக் குரல். நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பூமிப்பந்தின் இளைஞர்களை ஒரு குரல் ஈர்க்கிறது என்றால் அதன் வசீகரச் சக்தி புரியும். 39 ஆண்டு காலமே வாழ்ந்து அமெரிக்காவின் உளவுப் படையால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு வீரத் தலைவனின் வாழ்க்கையை புரட்டு பவர்களின் இதயங்களில் கண்ணீர் வழியாமல் இருந்ததில்லை.

அடுத்த வேளை உணவிற்காக போராடும் வறுமைக் குடும்பத்தில் பிறந்து தன் சமூகத்தின் உரிமைக்காக சே குவாரா போராடியிருந்தால் அது தன் இனத்தின் விடியலுக்கான விடுதலைப் போராட்டமாக இருந்திருக்கக் கூடும். ஆனால் அவர் பிறந்தது தென்னமெரிக்க கண்டத்தின் பணக் கார நாடான அர்ஜென்டினாவில் நிலவுடைமை வம்சத்தை சேர்ந்த ஒரு பணக்காரத் தம்பதியருக்கு. தன் வீட்டின் அருகில் வசித்துவந்த கூலித் தொழி லாளர்களின் குழந்தைகளுடன் விளையாடும் பழக்கம் சே குவாராவிற்கு இருந்ததினால் ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கை முறையும் கஷ்டங் களும் அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தன.

மருத்துவப் படிப்பில் சேர்ந்திருந்தாலும் அவருக்கு கியூபா நாட்டு விடுதலைக்காகப் போராடும் பற்று இருந்தது. ஏழைகளும், அடிமைகளும் எந்த நாட்டில் இருந்தால் என்ன அவர்கள் எல்லாம் மனிதர்கள் தானே என்று உலகு தாண்டிய சிந்தனை அவர் நெஞ்சில் இருந்தது. அதனால்தான் அர்ஜெண்டினாவில் அவர் பிறந்திருந்தாலும் கியூபா நாட்டு மக்கள் அவரை தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். மருத்துவப் படிப்பினை பாதியில் நிறுத்திவிட்டு தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க தன் நண்பருடன் பயணம் போனவர் சே குராவா.



செல்வக்குடியில் பிறந்த சீமான், மருத்துவம் பயின்றதையும் பாதியில் நிறுத்திவிட்டு சுகங்களை சுகிப்பதை விட்டுவிட்டு நோயாலும், அடிமை வாழ்வாலும் சிரமப்படும் மக்களின் துயரங்களை போக்க வேண்டுமென எண்ணினார். அதற்காக தன் காதலையும் இழந்து நின்று விடுதலை வேட்கை என்ற லட்சியத்தில் தன்னை நிறுத்திக் கொண்டவர் அவர். சச்சினா அவர் காதலி. வலிந்து வந்து சே குவாராவைக் காதலித்தவர். தான் தென் அமெரிக்க கண்டத்திற்கு தன் நண்பருடன் மோட்டார் சைக்கிளிலில் தொழு நோயாளிகளின் சிகிச்சைக்காக புறப்பட்ட போது சச்சினாவை சமாதானப்படுத்துவது அவருக்கு பெரும் சவாலாக இருந்தது. ஒரு நாள் இரவு முழுவதும் சச்சினாவுடன் பிராமர் கடற்கரையில் அமர்ந்து பணம் சம்பாதிப்பதற்காக நான் மருத்துவம் படிக்கவில்லை என்றும் தன்னுடைய சுதந்திர விருப்பம் மக்களை துன்பத்திலிருந்தும் நோயிலிருந்தும் காப்பதுவும் தொழுநோயை குணப்படுத்த மருந்தைக் கண்டுபிடிப்பதுவும் இந்தப் பயணத்தை என்னால் தவிர்க்க இயலாது என்றும் தனக்காகக் காத்திருக்கும்படியும், பயணம் முடிந்து வந்து நிச்சயம் உன்னைக் கைப்பிடிப்பேன் என்று வாக்குறுதி தந்தார் அவர். சே குவாராவை பிரிய முடியாமல் அரைகுறை மனதுடன் அவரை வழியனுப்பிய சச்சினா, ஆனால் சே குவாரா தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு காதலியை தேடி வந்தபோது சச்சினா மாறிப்போயிருந்தாள். சே குவாராவின் அழுக்கைக் கவர்ச்சியாக ரசித்தவளின் கண்கள் இப்போது பணக்கார வீட்டின் விலை உயர்ந்த சீலைகள் தொங்கும் ஜன்னல்களை ரசித்தன. சுத்தமான நாகரிக உடைகளை அணிவது பற்றி சே குவாராவுக்கு அவள் வகுப்பு எடுத்தாள். அதற்குக் காரணம் அவளுடைய வீட்டார் தேடித்தந்த சம அந்தஸ்துள்ள மணமகன் என்று தெரிந்ததும் தோல்வி மனப்பான்மையுடன் சே குவாரா சச்சிவீனாவை விட்டுப் பிரிந்தார். மக்களின் விடுதலைக்காக, தொழுநோயாளிகளின் சேவைக்காக தன்னுடைய காதலை தொலைத்த சே குவாரா அதை மறக்க தன்னுடைய இரண்டாவது பயணத்துக்கான பாதையை தேர்ந்தெடுத்தார். அதுதான் உலகத்தை வெல்லப்போகும் நிரந்த உண்மையாக அவரை மாற வைத்தது.

அவர் இறந்து 40 ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய அந்த முகத்தை அதிகாரத்திற்கெதிரான சுதந்திரக் கொடியாக தங்கள் உடம்பிலும் உடையிலும் இளைஞர்கள் ஏந்திச் செல்ல ஆரம்பித்ததுதான் அவருடைய வசீகரத்திற்கு காரணம். அவருடைய வாழ்க்கை ஒவ்வொரு இளைஞனுக்கும், அதிகாரத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் கையேடாக இருக்கிறது.

ஒரு இளைஞன் சொல்கிறான், நாங்க ளெல்லாம் எங்களுடைய இருளைப் போக்க யாராவது வருவார்கள் என்று காத்திருந்தோம். ஆனால் சே குவாராவின் வார்த்தைகள் அதை எங்களையே செய்யத் துலீண்டின. ''உன்னால் செய்ய முடியாததை கடைபிடிக்க முடியாததை மற்றவரிடம் எதிர்பார்க்காதே'' என்ற வாசகம் தான் அதிகாரத்திற்கு எதிராகவும் அநீதிக்கு எதிராகவும் எங்களை போராட வைத்தது என்கிறார்.

''மரணத்தைப் பற்றி எனக்கு கவலையில்லை. என் பின்னால் வரும் தோழர்கள் என் துப்பாக்கியை எடுத்துக் கொள்வார்கள். தோட்டாக்கள் தொடர்ந்து சீறும்'' என்ற சே குவாராவின் வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல வாழ்ந்து காட்டிய வார்த்தைகள் என்கிறார்கள் அவருடைய வாழ்க்கையை படித்தவர்கள்.

சே குவாரா அழுக்கு உடை தரித்த மனிதராக இருக்கலாம். ஆனால் அவர் யாருக்கும் எதற்கும்

பயப்படாமல் நேருக்குநேராக நேர்மையாக நடந்து கொண்டு தனக்கு தவறெனப்படும் விஷயங்களை மறுத்து கடைசி வரையில் உண்மையாக வாழ்ந்தவர். அவர் சொல்லியிருக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் உண்மையானவையே. ''எங்கெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களின் குரல்கள் கேட்கிறதோ அங்கெல்லாம் என் கால்கள் பயணிக்கும்'' என்ற அவரின்கூற்று உண்மையே. சே குவாராவின் மீது மதிப்பும் மரியாதையும் கொண்ட இளைஞர்கள் இன்று அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள், செய்ய விழைந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார் சே குவாராவைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சியாளர்.

''உனக்கு முன்னால் நடக்கும் அக்கிரமங்களைக் கண்டு உன் ரத்தம் கொதித்தால் நீ என் தோழன்'' என்ற சே குவாராவின் வார்த்தைகள் சமதர்ம தத்துவம் தேடும் இளைஞனுக்கு சே குவாரா கல்லறையிலிருந்து எழுந்து வந்து நேரடியாக சொல்லும் வார்த்தைகளாகவே இருக்கின்றன என்கிறார் டெல்லி ஜவஹர்லால் பல்கலைக் கழக மாணவர் ஒருவர்.

''நான் சாகடிக்கப்படலாம் ஆனால் ஒரு போதும் தோற்கடிக்கப்பட மாட்டேன். சுதந்திரம் என்பது போராடாமலேயே கிடைத்துவிடும் என்ற கனவை நாம் வளர்த்துக் கொள்ளக் கூடாது. விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை. விதைத்துக் கொண்ட இரு. விளைந்நால் மரம் இல்லையேல் உரம். எல்லா மனிதர்களுக்கும் அன்பும் மனிதமும் சரிசமமாக கிடைக்கும் வரை நாம் போராடிக் கொண்டிருக்க வேண்டும்.'' சே குராவா மறைந்து போய் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆனாலும் அவரின் இந்த வார்த்தைகள் இன்னும் உயிரோடு தான் இருந்து கொண்டிருக்கின்றன. எங்கெல்லாம் அதிகாரங்கள் சுதந்திரக் காற்றை சிறை பிடிக்க நினைக்கின்றதோ அங்கெல்லாம் சே குவாரா எழுந்து வருவார் என்ற நம்பிக்கை நாளும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

அதிகாரத் திமிரும் ஜனநாயகப் படுகொலைகளும் அரசமைப்புச் சட்டங்களின் ஆசீர்வாதத்தோடு நிகழ்ந்தேறும் எந்த ஒரு ஒரு தேசத்திலும் வெறுமனே காற்றில் ஆடும், ஒரு போராளியின் குண்டு துளைத்த சட்டை எத்தகைய மாற்று சக்தியை ஏற்படுத்தும் என்பதற்கு பொறுமையின் எல்லை கடந்து வரும் மக்களின் கோபம் இந்த உலகத்திற்கு எடுத்துக் காட்டும் நாள் எதிரே தெரிகிறது.

*- ஜிஜி*

# பட்டுவேட்டி கனவும்... ஒட்டுத்துணி கோவணமும்!

அப்போதே பலர் உன்னைத்
தூக்கிப் போட்டுவிடலாம் என்றார்கள்
சிலரோ உன்னைச் சரிசெய்தால்
வாழ்க்கை வசந்தமாகும் என்றார்கள்

நீ பத்து வருடத்து பழைய நாற்காலி
கொஞ்சம் கொஞ்சமாய் சரி செய்தால்
இன்னும் கொஞ்ச நாள் வருவாய் என்ற
என்ற நப்பாசையில் சரி செய்தோம்.

நீ மேடையேறியதும் ஏற்றிய எங்களையே
வூடு கட்டி அடித்தாய்.
பழைய பென்சன் கொடுப்பதும்
அகவிலைப்படி அளிப்பதும்
சமூக அநீதியென உன்னுடைய
பீச்சாங்காலால் உதைத்தாய்.



பட்டுவேட்டி கனவில் மிதந்திருந்த
எங்களின் ஒட்டுத்துணி கோவணம்
ஒரு கணத்தில் உறுவப்பட்டது.

உன்னைக் காலால் மிதித்தவனையும்
தடியால் அடித்தவனையும்
தடுத்துக் காத்த எங்கள் கைகளுக்கு
நீ பரிசளித்திருப்பது கைவிலங்கு.

வாழ்க்கை வசந்தமாகும் என்றவர்களும்
வாழ்த்தி மாலை அணிவித்தவர்களும்
எங்களை துக்கம் விசாரித்ததுகூட வலிக்கவில்லை
ஆனால், "அரசியலில் இதெல்லாம் சகஜம்" என்று
ஆறுதல் சொல்கிறார்களே அதைத்தான்
எங்களால் ஜீரணிக்க முடியவில்லை.

*- ஜிஜி*

# தமிழ்நாடு அருங்காட்சியக ஊழியர் நல சங்க மாநில பொதுக்குழு



**த**மிழ்நாடு அருங்காட்சியக ஊழியர் நல சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் 03.09.2021 அன்று சென்னை திருவல்லிக்கேணி TNGEA கூட்ட அரங்கில் எஸ்.பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் ஏ.விஜயா வரவேற்றார். நசுரூதின் அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

வடசென்னை மாவட்ட செயலாளர் ம.அந்தோணிசாமி துவக்கவுரையாற்றினார். செயலாளர் அறிக்கையை தலைவர் எஸ்.பார்த்திபனும், பொருளாளர் அறிக்கையை எம்.மருதுபாண்டியனும் சமர்ப்பித்தனர்.

TNGEA எழும்பூர் பகுதி செயலாளர் பி.அன்சர்பாஷா, TNGEA மேனாள் மாநில துணைத் தலைவர் எஸ்.ஏ.வெற்றிராஜன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

அறிக்கை மீது விவாதம் நடைபெற்று தொகுப்புரைக்கு பின் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

1) தமிழகத்தில் புதியதாக பதவி ஏற்றுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் நமது துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களுக்கும் இப்பொதுகுழ பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது

2) அருங்காட்சியகத்தில் உள்ள அனைத்து பிரிவு காலிப்பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப தமிழக அரசை வலியுறுத்தி இப்பொதுக்குழ கேட்டுக்கொள்ளப்படுகிறது

3) அருங்காட்சியகவியல் தொடர்பாக Institute of Museologhy உருவாக்க தர அரசை இப்பொதுகுழ வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

4) எழும்பூர் அருங்காட்சியகத்தில் உள்ள குளத்தை சீர் செய்து மக்களுக்கு படகு சாவரி செய்யகூடிய வகையில் மேம்படுத்த கேட்டுக்கொள்கிறது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் புதிய மாநில நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்

மாநில தலைவராக ஏ.விஜயா, துணைத் தலைவர்களாக ஜி.வசந்தி, பா ஞானசேகரன், பி.தமிழரசன், எம்.கோதண்டம், பொதுச் செயலாளராக எம்.மருதுபாண்டியன், மாநில செயலாளர்களாக டி.ஆன்ரூஸ், பி.தனலட்சுமி, ப.முத்துக்குமார், சு தனலட்சுமி, பொருளாளராக எஸ்.உமாசங்கர், தலைமை நிலைய செயலாளராக டி.அன்பரசன் மற்றும் மாநில செயற்குழ உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். புதிய பொதுச் செயலாளர் எம்.மருதுபாண்டியன் உரையாற்றினார். TNGEA மாநில தலைவர் மு அன்பரசு நிறைவுரையாற்றினார். எஸ்.உமாசங்கர் நன்றி கூறினார்.

■

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com